விலை ரூபா 2-00

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

16 பக்கங்கள்

ஈழநாடு
வார மலர் EELANADU VARAMALAR

## புலிகள கண்டனம்

(சென்னை)

அமெரிக்கத் தம்பதியரை பணயக் கைதிகளாக கடத்திச்சென்றவர்கள் பொறுப்பற்ற விதத்தில், தமிழ்நாடு அரசாங்கத்தின் பெயரைச் சம்பந்தப்படுத்தியிருக்கிறார்களென தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் நேற்று கண்டனம் தெரிவித்துள்ளது.

'புலி'கள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சென்னையில் விடுத்துள்ள அறிக்கையொன்றில்

(16-ம் பக்கம் பார்க்க)

மலர் 26 சித்திரை 31 ஷஃபர் 11 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 13—5—84 இதழ் 88

# அமெரிக்கத் தம்பதியைத் தேடி

# யுத்தக்கப்பல்கள் வேட்டை!

புதுடில்லி

**யாழ்ப்பாணத்திலிருந்து கடத்தப்பட்ட அமெரிக்க இளம் தம்பதியரை இந்திய பாதுகாப்புப் படையின் யுத்தக் கப்பல்களும் விமானங்களும் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**


கடந்த வியாழக்கிழமை இரவு கடத்தப்பட்ட முப்பது வயதான ஸ்டான்லி ஆலெனும், இருபத்தெட்டு வயதான மேரி டேமனும் தமிழ்நாட்டுக்குக் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாமென்று நம்பப்பட்ட போதிலும், தமிழகத்திற்கு இவர்கள் வந்ததாகத் தெரியவில்லை என்று தமிழக அரச உயர் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தென்பகுதியிலும், மற்றும் முக்கிய கடற்பிராந்தியங்களிலும் இந்திய கடற்படை கப்பல்களும், விமானங்களும் தேடுதலை மேற்கொண்டுள்ளதாக பி.ரி.ஐ செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கத் தம்பதிகள் தமிழ் நாட்டுக்குக் கடத்தப்பட்டு அங்கு வைக்கப்படுவார்களேயானால், அவர்களை விடுவிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் இந்தியா எடுக்குமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசாங்கம் இந்த மனிதாபிமானமற்ற செயலுக்கு என்றுமே ஆதரவு அளிக்க மாட்டாது என்றும், இவ்விதமான செயல்களை தமிழகம் என்றுமே ஏற்றுக் கொள்ளமாட்டாதென்றும், தமிழக அரசின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டுக்கு பணயக் கைதிகள் கடத்தப்பட்டுக் கொண்டு வரப்பட்டுள்ளதாக இலங்கை அரச தரப்பிற போதிலும், தமது பொறுத்தவரையில் தமிழகத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்ததாக தெரியவில்லை என்றும் அவ்வதிகாரி தெரிவித்தார்.



கடத்தப்பட்ட அமெரிக்கத் தம்பதியர்

## கூட்டணித் தலைவர்கள் கோரிக்கை—

# 'உலக நல்லெண்ணத்தை தமிழ்மக்கள் இழக்கநேரிடும்'

(யாழ்ப்பாணம்)

"கடத்திச்செல்லப்படுள்ள அமெரிக்கத் தம்பதியரை உடனடியாக நிபந்தனை எதுவுமின்றி விடுவிக்கவேண்டும். இத் தம்பதிகளுக்கு ஏதும் இம்சை விளைவிக்கப்படுமானால் உலகம் பூராவிலும் தமிழ்மக்கள் மீது இருந்து வரும் நல்லெண்ணம் பாதிக்கப்படும்."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கமும், தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இரு தலைவர்களும் வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

யாழ்ப்பாண மக்களுக்கு நீர் வழங்கும் திட்டமொன்றில் பணியாற்றி வந்த ஒரு அமெரிக்கத் தம்பதி கடத்தப்பட்ட செய்தி குறித்து நாம் பெரிதும் அதிர்ச்சியடைந்துள்ளோம். எமது மத்தியில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களை இம்சைப்படுத்துவதானது தமிழ்மக்கள் யுகயுகாந்திரங்களாகப் பேணி பாதுகாத்து வரும் பாரம்பரிய பண்பாடுகளுக்கு முரண்பட்ட செயலாகும். நியாய சிந்தையுள்ள அனைவராலும் கண்டிக்கப்படவேண்டியதாகும்.

கடத்தப்பட்ட அமெரிக்கத் தம்பதியை எதுவித நிபந்

(16-ம் பக்கம் பார்க்க)

## "எம்.ஜி.ஆர். ஒன்றுபடுத்திய இயக்கங்களே கடத்தின!"

### அமைச்சர் லலித் கூறுகிறார்

(இ. கந்தசாமி)

அமெரிக்கத் தம்பதியைக் கடத்திய கடத்தல்காரர்களுடன் இருவரை இலங்கைஅரசு எந்தவிதமாகவும் தொடர்பு கொள்ளவில்லை என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று தெரிவித்தார்.

குடும்ப உறவு என்ற பந்த பாசத்துக்கு மிக மதிப்புக் கொடுப்பதில் யாழ்ப்பாணம் பெயர்பெற்று விளங்குகிறது. இவ்விதமான குடும்ப உறவுக்கும் உணர்வுக்கும் மதிப்புக் கொடுக்கும் பகுதியில் உதித்தவர்கள், இவர்களை மனிதாபிமானத்துடன் விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளித்தார்.

(16-ம் பக்கம் பார்க்க)

## ★ யாழ். அரச அதிபர் கோருகிறார்—

## அப்பாவிகளை விடுவியுங்கள்!

(யாழ்ப்பாணம்)

கடத்தப்பட்ட அப்பாவி அமெரிக்கத் தம்பதியரை உடனடியாக நிபந்தனையின்றி விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா.

யாழ்ப்பாணம் பொதுமக்களிடமிருந்தும் இதுசம்பந்தமான தகவல்களைக் கோருகிறார்கள் யாழ். பொலிஸார். தகவல் தெரிந்தவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு அறியத்தருமாறு வேண்டுகின்றனர்.

# தமிழர் உரிமைபெறும்போது

# 'வித்தி'க்கும் கௌரவம்!

## யாழ் நகரில் நடந்த மணிவிழாவில் அமிர்

(ஏ. வி. மாணிக்கம்)

"தமிழர்கள் இன்று உரிமை பெற்று தலைநிமிர்ந்து வாழ்கின்ற காலத்தில் இன்று மணிவிழா காணும் திருவாளர் பொன்னம்பலம் வித்தியானந்தனுக்கு உரிய இடம் வழங்கி, கௌரவிக்கப்படுவார்" என்று நேற்று யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் மணிவிழாவில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஈழநாடு பத்திரிகை நண்பர்கள் ஏற்பாட்டில் நடந்த இம்மணிவிழாவுக்கு இலங்கை உதயம் பத்திரிகையாளர் சபாரத்தினம் தலைமை வகித்தார். பிரதம ஆசிரியருமான திரு ஆர். சிவகுருநாதன் தலைமைவகித்தார்.

மண்டபம் நிறைந்த அறிஞர்களும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், அதிகாரிகளும், பல்கலைக்கழக மாணவர்களும் கல்லூரிகளும் மற்றும் பொதுமக்களும் இவ்விழாவில் பங்கு கொண்டனர்.

திரு எஸ். திருச்செல்வம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில்:

"இன்று மணிவிழாக் காணும் பேராசிரியரும் அவரும் விழாஎடுப்பவர்களும் இக்கவிதை இன்று நடைபெறுகின்றது. உள்ளத்திலிருந்து இச்சூழ்நிலையும், 74ம் ஆண்டு தைமாதம் 10ம் திகதி நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாடு

(16ம் பக்கம் பார்க்க)

# வார மலர்
## ஈழநாடு
EELANADU VARAMALAR

# இந்தோனேஷியாவில் ஒரு பட்டதாரிகள் தொண்டர் சேவை அமைப்பு

## அதன் பெயர் புட்சி

நடராஜா செல்வராஜா
உதவி நூலகர், திருநெல்வேலி
சவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனம்

இலங்கையில் சமூக சேவைகளில் பல்வேறு தொண்டர் ஸ்தாபனங்கள் பரவலாக ஈடுபட்டுவரினும், கிராம மக்கள் மத்தியில் அவற்றின் சேவைகளால் பிரபல்யமடைந்திருக்கும் ஸ்தாபனங்களை நாம் விரல்விட்டு எண்ணிவிடலாம். இத்தகைய தொண்டர் ஸ்தாபனங்கள் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள்ளாக அமையாது அரசின் ஆதரவுடனோ அபிமானத்துடனோ அல்லது அரசின் அனுதாபத்துடனோ இயங்குபவையாகவே உள்ளன.

கிராமத்தின் அடித்தளத்தை ஒரு தொண்டர் ஸ்தாபனத்தின் சேவை சென்றடைவதனால் கிராமம் எவ்வளவுதூரம் நன்மையடைகின்றதென்பதிலிருந்தே அந்த ஸ்தாபனம் கிராமமக்களின் மத்தியில் பிரபல்யமடைகின்றது.

சமூகசேவை ஒரு சுதந்திரமான சேவை. தேசபக்தி மனிதாபிமானம்கொண்ட எவரும் அதை முழுமனதுடன் செய்யலாமென்ற சமூக நியதி நம்மிடையே உள்ளது. இதைத் தமக்குச் சாதகமாகக்கொண்ட சில சுயநலவாதக் குழுக்கள் கிராமங்களில் ஒதுங்கிய வட்டத்துள் சமூகசேவை என்ற பெயரில் சுய விளம்பரம் தேடிக்கொள்ளும் சுயநலவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதைப் பல பின்தங்கிய கிராமங்களில் நாம் காணமுடிகின்றது.

ஒரு சிலரின் இத்தகைய செயல்களினால் இன்று சமூக சேவையை மதிப்புள்ளதும் உயர்ந்ததுமான ஒரு சேவையாகக் கருதும் தன்மை நம் கிராமங்களில் அருகி வருகின்றது. சமூகசேவையில் ஈடுபட விரும்பும் தொண்டர்களைக் கிராமம் முதலில் சந்தேகக் கண்கொண்டே பார்க்கிறது பின்னர் அது அனுதாபக் கண்ணோட்டமாகவும், சிலவேளைகளில் ஏளனப் பார்வையிலும் முடிவுறுகிறது.

வேலைவெட்டி இல்லாதவர்களின் கடமையென்ற பெயர் பெற்றுக் கிராமத்தின் இயலாமையும் இயங்காமலுள்ள சங்கங்கள்தான் எத்தனை?

வெளிநாடுகளில், குறிப்பாக நமது அண்டை நாடுகளில் தொண்டர் ஸ்தாபனங்கள் தேசிய மட்டத்தில் கட்டுக்கோப்புடனும் உறுதியான நீண்டகாலச் செயல் திட்டங்களுடனும் இயங்கிவருகின்றன.

இத்தகைய ஸ்தாபனங்களில் இந்தோனேஷிய நாட்டின் தேசிய தொண்டர் ஸ்தாபனமான 'புட்சி' நிறுவனமும் ஒன்றாகும்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அபிவிருத்தித் திட்டப் பிரிவின் கீழ் இயங்கும் ஐக்கிய நாடுகள் தொண்டர் சேவையில் கடமையேற்று இந்தோனேஷிய நாட்டுக்குச் சென்று ஒரு வருடகாலம் கிராம நூலக அபிவிருத்தித்திட்டமொன்றை அறிமுகப்படுத்தும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இப்பயணம் வெறும் தொழில் ரீதியிலானதொரு பிரயாணமாக அல்லாது இரு நாடுகளுக்கிடையே கலாசாரப் பரிமாற்றத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் ஒரு திட்டமாக அமைந்திருந்தது.

இந்தோனேஷியாவில் எமது சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்பாடாகவிருந்தது அந்த நாட்டின் புட்சி நிறுவனமாகும். "படான் உருசான் தெனகா சுகரெலாவான் இந்தோனேஷியா" (Badan Urusan Tenaga Sukeralawan Indonesia) என்பதே இந்நிறுவனத்தின் முழுப் பெயராகும். இந்தோனேஷியத் தொண்டர் சேவை அமைப்பு என்பதே இதன் கருத்தாகும்.

இந்தோனேஷியாவின் மனித வலு, குடியேற்ற, கூட்டுறவுத் துறை அமைச்சின் (Ministry of manpower, transmigiration and Co-operatives) ஓர் அங்கமாகப் புட்சி நிறுவனம் இயங்குகின்றது.

இந்தோனேஷியாவின் தொண்டர் சேவை திட்டமிடப்பட்டதும் மதிப்பிற்குரியதுமான ஒரு சேவையாகும். இதன் தொண்டர்கள் அனைவரும் பட்டதாரிகளாவர்.

புட்சி நிறுவனம் அரசாங்கத்தின் அமைச்சொன்றின்கீழ் இயங்கினாலும் இது ஒரு சுதந்திரமான ஸ்தாபனமாகவே செயற்பட்டுவருகின்றது. அரசின் தலையீடின்றி இயங்கும் இந்த நிறுவனம் கிராம மட்டத்தில் [illegible]

[illegible]

# தெய்வீகத் திருநாள்

நாளை பௌத்த மக்களின் வெசாக் பெருநாள். மறுநாள் இந்துக்களின் வைகாசி விசாகப் பெருநாள். தேசியப் பெருவிழாக்கள் இவை.

கடந்த காலத்தில் குறிப்பாக இலங்கை சுதந்திரமடைந்த பத்தாண்டுக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வெசாக்கொண்டாட்டம் நாட்டில் நிலவிய இன ஒற்றுமையின் உச்சத்தை விளக்கியது.

மேன்மை நாடிய மக்களுக்கு சாந்தம் தானே வந்தமைந்த காலம் அது.

அத்தகைய நாட்டத்தை நாடு இன்று இழந்து தவிக்கின்றது.

இதனைத் திரும்பப் புதுப்பித்தலுக்கு இத்தெய்வீகத் திருநாட்கள் மிகப்பொருத்தமானவை.

விலங்குத் தன்மை தாண்டவமாடிக் கொண்டிருக்கும்போது மனிதன் அமைதிக்கு அருகன் ஆகமாட்டான். விலங்குத்தன்மையில் வெறுப்பு ஏற்படுவது அமைதிக்கு முதற்படியாகும்.

பானைக்குள் இருந்தால் அகப்பைக்குள் வரும் என்பார்கள். வட்டமேசையும் சர்வமத மாநாடும் நல்ல அகப்பைகளே!

[illegible] நிறைந்த நாட்டில் பல புனிதத்தலங்கள் உள. தெற்கிலே அடர்ந்தகாட்டின் நடுவில் வீற்றிருக்கும் முருகப்பெருமானும் வடக்கில் நாகதீபமும், நல்லை தேர்த்திருவிழா நடைபெறும் கேதீச்சரமும் இந்நாட்டுமக்கள் அனைவரின் ஒருமைப்பாட்டை வளர்க்கும் வீரம் பெற்றவை.

அரசியல் என்னவானாலும் நாட்டின் அரசுக்கும் மக்களுக்கும் இன்று தேவைப்படும் அமைதியை வளர்க்க இந்நன்னாள் உதவவேண்டும்.





## ரஸ்ற் ரவல் சேர்விஸ்

11/A, மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.
T. P. 24111

தலைமைக்கந்தோர்:
65, சதாம் வீதி, ஹைதிராமணி ஆர்காட், கோட்டை.

கனடாவில் குடி வரவு அனுமதி பெற்று செல்பவர்களுக்கு

ஒரு நற்செய்தி

★ குறைந்த செலவில் கனடா செல்வதற்கு விமான டிக்கட்டுகளை பெற்றுக்கொள்வதற்கு உடனே நாடுங்கள்.

டிக்கட் விபரம்:

| | | |
|---|---|---|
| கொழும்பு | — | மொன்றியல் |
| C M B / MONTRIAL | — | 15098/- O/W |
| கொழும்பு | — | ரொறன்டோ |
| C M B / TORONTO | — | 16082/- O/W |
| கொழும்பு | — | வான்கூவர் |
| C M B / VANCOOVAR | — | 14575/- O/W |

★ கனேடியன் பசிபிக் (CPAIR) விமானக்கம்பனியின் பிரதிநிதியாக பதிவு செய்யப்பட்டுள்ள எமது காரியாலயத்தின் சேவையை ஒருமுறை விஜயம் செய்து பரிசீலித்துக்கொள்ளுங்கள். மற்றும் ஏரோஃபுளொட், C. S. A. AIRLANKA விமான டிக்கட்டுகளில் விசேட கழிவு [illegible] பெற்றுக்கொள்வதற்கு

★ உடன் நாடுங்கள்.



## தேசத்திற்காக ஐக்கிய ஜெப நாள்
## United Day of Prayer FOR THE NATION

தேசத்திலே சமாதானம் நிலவ!
தெய்வ ஆசீர்வாதம் பெற!
இயேசுவின் பாதத்தில் ஒரு நாள்!

இடம்: யாழ். நகர மண்டபம்
காலம்: 14—5—1984 திங்கட்கிழமை
நேரம்: காலை 9-00 மணிமுதல் 12-00 மணிவரை

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பங்குபெறும் கிறிஸ்தவ சபைகள்

1. [illegible] மேதர் மெமோரியல் சபை—மானிப்பாய்
2. சீயோன் தேவாலயம்—யாழ்ப்பாணம்.
3. சாரோன் ஜெப ஆலயம்—இருபாலை.
4. இயேசு நிலையம்—உடுப்பிட்டி.
5. கல்வாரி தேவாலயம்—கொக்குவில்.
6. [illegible]—[illegible]குழி.
7. [illegible]—இணுவில்.
8. ஜெப ஆலயம்—[illegible].

3334

## எமது சிறுகதை

# கொழும்புக்கு ஒரு கடிதம்

தையிட்டி அ. இராசதுரை

படபடவென்று கடிதமெழுதி முடித்தகையோடு, எழுதியகடிதத்தை இரண்டாக மடித்துக்கடிதஉறைக்குள் கவனமாகவைத்துவிட்டு, நாக்கினுல் எச்சில்பூசிக் கடிதத்தை நன்ருக உடம்பில் உள்ள 'சவி'யெல்லாம் கூட்டி அழுத்தி அமத்திஒட்டிவிட்டு, முத்திரையையும் பின்பக்கத்தில் எச்சில்பூசி ஒட்டிசொற்ப விஞடிகளுக்கு அந்தமுத்திரையில் ஒட்டியகைவிரலை எடுக்காமல் அழுத்திப்பிடித்துவிட்டு, 'சேரல்' என்று தனித்தமிழில் பற்றுடன் எழுதி, திரு. மு. சிவபாதம் என்று கணவனின் கொழும்புமுகவரியை இராசாத்தி எழுதத்தொடங்குவதற்கும் ''ராசாத்தியக்கா என்ன, நான் சொன்ன விஷயமும் உங்கடையவருக்கு எழுதினியளோ ?'' என்றுகேட்டபடியே வந்த அருந்ததி, இராசாத்திக்கு முன்னுல் வந்துவெறும் நிலத்தில் சக்கப்பணியக் குந்துவதற்கும் சரியாகஇருந்தது.

''நீஉண்மையிலைஒருசரியானலக்காளிதான்ரி அருந்ததி'' என்று இராகமிழுத்துத் தொடங்கிய இராசாத்தி, ''எடியேய், நீ சொன்ன விஷயத்தையெல்லாம் அப்படியே படம்பிடிக்கிற என்னம் பொருகெமராவாலை படம் பிடிச்சமாதிரி அவருக்கு அப்படியே அச்சொட்டாப்போலை எழுதியிருக்கிறேனே ...சீ... கொஞ்சம்இந்தக்காயிதப் ஒட்ட முந்திவந்திருப்பியெண்டால் நான்அவருக்கு எப்படி எழுதியிருக்கிறனெண்டதையெல்லாம் உனக்கொருக்கா வடிவாகவாசிச்சுக் காட்டிப் போட்டுத்தான் உள்ளுக்கு வைச்சிருப்பனென்று அழகாரமாகச் சொல்லிமுடித்ததும், அப்படியே அம்பாளின் சந்நிதியில் தன்னைமறந்துவிட்ட நிலைக்குவந்துவிட்ட ஒருபக்தையாகத் தனக்குள் உருகி வழிந்துகொண்ட அருந்ததி ''......எனக்கு நீங்கள் இவ்வளவு மதிப்புக்குடுத்ததே போதும். ராசாத்தியக்கா...'' என்றுஅருந்ததி கண்கலங்கி நன்றியுள்ள ஒருநாயாகநிற்க, இராசாத்தி அந்தக்கடிதத்தை அருந்ததிக்கு முன்னுல் நீட்டிப் பிடிக்கின்ருள். ''இந்தாடி அருந்ததி .. நீ......கறிவாங்கச் சந்தைப்பக்கம் போருய் தானே, இந்தக்காகிதத்தையும் சந்தையடியில் தபால்பெட்டியிலை நல்லாய் உள்ளுக்குப்போட்டுவிடென்ன...?'' என்று இராசாத்தி சொன்னபோது, அம்பாளிடமிருந்து நேரடியாகப் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்ட உணர்வோடு அந்தக் கடிதத்தை இருகைநீட்டி வாங்கிக்கொண்ட அருந்ததி, ''நான் போயிற்றுவாறன் ராசாத்தியக்கா'' என்றுசொல்லிவிட்டு நடையைக் கட்டியதும் அவளுடையஉருவம் இராசாத்தியின் பார்வையிலிருந்து முற்ருகமறைய முதல்நாட்காலை தன்னிடம் அருந்ததி சொன்னவிடையத்தை இராசாத்தி மீண்டும் எத்தனையாவதோ தடவையாக நினைத்துப்பார்க்கிருள்......

### 2

''இராசாத்தியக்கா... எனக்கு நீங்களொரு உதவி செய்யவேணும் ...... செய்வியளோ...?

என்னண்டு சொல்லன்ரியப்பா...?''

''என்ரை மூத்தவன்... கப்பலுக்குப் போகவெண்டு...... கொழும்பிலை உள்ளஒரு ஏச்சென்ஸிக்காரனிட்டை எல்லாத்தையும் வித்துச்சுட்டுக் காசுநாற்பதிஞயிரம் கட்டி இப்ப பத்துமாசமாச்சு. அங்காலைவட்டி அதுக்குமேலை குட்டிபோட்டிட்டுது. இன்னும் தான்ஒருமுடிவும் இல்லை...... கப்பலுக்கு அனுப்பிருனில்லை... காசையுமதிருப்பித் குடுக்கிருனில்லை...பெடியனே இந்தப் பெரிய கலவரத்துக்கு முந்தி கப்பலுக்கு விடுகிறியோ அல்லது காசைத் தாறியோஎண்டு அவனிட்டைக் கேக்கிறதாக மட்டும் எத்தனையோதரம் சும்மாவிளையாட்டு விளையாட்டுப்போலை அடைவு வைச்சு வைச்சுக் குடுத்தகாசோடை கொழும்புக்குஅடுத்த வீட்டுக்குப்போய் வந்தது மாதிரிப்போய்வந்தவன்...இப்பஇந்தப்பெரிய பிரளயத்துக்குபிறகு ...கொழும்பெண்டு சொன்ஞக்காணும், ஏதோபேய் பிசாசைநேரிலை கண்டமாதிரி எனக்குக்கப்பலும் வேண்டாம் கட்டுமரமும் வேண்டாம் எண்டு என்னை கொல்லன் கழுத்தைமுறியனெண்டு நிக்கிருனக்கா...அட ஒண்டும்வேண்டாம், போய் அந்தக்காசிலையாவது எரியிற வீட்டிலைபுடுங்கிற லாபமெண்டகணக்காக ஒருஅரைவாசி காவாசியாவதெண்டு வாய்திறக்கமுன்னம் கொழும்புக்குப் போவதெண்டா இந்தா இப்பநான் மருந்து குடிக்கிறன உயிரைவிடுகிறன் எண்டுபெத்த வயித்திலை......''

''எடிஅருந்ததி, அப்ப நீ என்ன செய்யப்போகிறாய்?''

''பொறுங்கோவன் சொல்றன்... இப்ப இதுதான் எங்கடை திட்டம்''என்று அருந்ததி சொல்லிக் கொண்டிருக்க,

''அருந்ததி மச்சாள்...மாக்கற்றுக்கு வாறியளோ...'' இப்படி 'அண்டல்' அன்னம்மா கையில் கூடையும் ஆட்டிக்கொண்டு, சிலுக்குப் பணியில் வந்து நுழைந்ததும் அருந்ததியின் நினைவுத் தொடர் படீரென அறுந்து போக ''ஒரு பத்து நிமிஷம் பொறு அன்னம்மா'' என்றபடியே அருந்ததி போட்டிருந்த ரெஸ்ஸிங் கவுணுக்கு மேல் சேலையை எடுத்துச் சுற்றிக் கொண்டு ஆயித்தமாகின்ற நேரம், மனதிற்குள் காவிக்கொண்டு வந்ததை அப்படியே வாய் திறந்து அருந்ததிக்கு முன்னுல் வாந்தி எடுத்தது போன்று கபக்கென்று கொட்டித் தள்ளிவிடுகின்ருள் அண்டல் அன்னம்மா. சில விநாடிகளுக்கு யோசித்த அருந்ததி மின்னலாக ஒரு நினைவு பாய்ந்து வர ''அன்னம்மா நீ முன்னுக்குப் போடி.... கறி பிந்தப் போகுது... நான் தபால்காரனைப் பாத்துக்கொண்டு தான் உந்தப் பக்கம் வரவேணும்...''என்ற ஒரு சாட்டைச சொல்லி ,அண்டல்' அன்னம்மாவை அனுப்பி வைத்துவிட்டு இராசாத்தியின் கடிதத்தை உடைக்கத் தொடங்கியதும் அருந்ததியின் கைகால்களெல்லாம் பதறத் தொடங்கி விடவே... ஒரு அசட்டுத் தைரியத்தை வில்லங்கமாகக் கூப்பிட்டுக் கொண்டவளாக ''இராசாத்தி இனிப்போ கசப்போ எண்டதை அறிந்து வைத்திருந்தால் இனிமேலைக்காவது அவதானமாக இருக்கலாம் இடத்திலிருந்து... மலைப் பாதையில் தொன் கணக்கான பாரச்சுமையோடு... முக்கித் தக்கி இழுத்துப் போகும் குட்ஸ் ரயில் வண்டியாக ஆறுதலாக ஆத்திரமாக கடிதத்தைப் படிக்க ஆரம்பிக்கிருள். அவவின்ரை திட்டம். இதுதாஞம். தன்ரை மகனுக்குப் பொடிக் காட்டாக.. இன்னெரு சிங்களம் தெரிஞ்ச பெடியனையும் கூட்டி இந்த மாசம் பத்தாம் திகதி அனுப்புருவாம் அவை இரண்டு பேரும் உங்கடை ரூமிலை ஒரு கிழமைக்கு நிண்டு அந்த ஏசென்ஸிக்காரனைக் கண்டுபிடிச்சு எப்படியும் காசோடை தாஞம் ஊருக்கு வரவேணும்... அவனும் நெருப்பிலை எரிஞ்சு போனுனே ஆருக்குத் தெரியும்... நீங்கள் வழமையாகச் சாப்பிட்டு வந்த சைவக் கடையளும் நெருப்பிலை வெந்து போன பிறகு, இப்ப நீங்கள் குக்கர் வைச்சுத்தான் சமைக்கிறியள் அருந்ததியாற்றை இரண்டு விருந்தாளிகளும் உங்களோடை ஒரு கிழமைக்கு வந்திருந்து மாப்பிளைச் சோறு தின்னத் தொடங்கினுல் நான் மெயின் ரோட்டிலை உள்ள எங்கடை காணியைத் தான் விக்க வேண்டிவரும் இனி நீங்களும் என்னைப்போல இல்லை. ஒரு பாவம் பழி பாக்கிற சென்மம்... இப்ப நீங்கள் நான் சொல்லுற மூளையின் படி இந்த ம்மாசம் 5ம் திகதியோடை உங்களைக் கணிக்கு தானே... அறுபத்தைந்து சதம்' செலவழித்தால் ஒரு புது முத்திரையும் புதுக்க வரும்... என்றெல்லாம் எண்ணித் துணிந்த பின் கடிதத்தை 'மள மள' வென்று ஒரு முறை ஒரு சொல்லும் தப்பவிடாமல் படித்து முடித்துவிட்டு, இரண்டாவது முறையாக முக்கியமான

12ம் பக்கம் பார்க்க

## மாறியோ டி அந்திராடே யின்

## பேராவல்

வறுமையின் இனிமையே இதுதான்- —
உனது என்பன அனைத்தையும் இழத்தல்
நான் என்கின்ற இருப்பையும் கூடத்தான்

கூட்டத்தில் ஒருவனுய்க் கலப்பதைவிடவும் - மீ
ஈட்டவல்லது ஒன்றுமில்லை வறுமையிலே...

என்னது என்கின்ற அனைத்தையும் கொடுத்தேன்
என்னது இருப்பு எல்லாம் செலவிட்டேன்
என்னிடம் உள்ளதெல்லாம்
எல்லோரிடமும் உள்ளவை மட்டுந்தான் -

வறுமையின் இனிமையே இதுதான் - ...

நான் இனித் தனியன் அல்லேன்,
சமத்துவ மனிதருட் கலந்தேன்.

ஈரமான பூமியின்
காலைப்பனிமீதென்
காலடிச் சுவடுகளைப்
பதித்து நடந்தேன் -
பின்,

ஆதவன் எழுந்தான் - தன்
பொன்னிற கதிர்களால் பூமியைச் சுட்டான்-
இறுகிய மண்ணில் - என்
சுவடுகள் மறைந்தன

ஆனுலும்
மென்கனிவான ஊமையாய்,
வளரும், வருந்தும் மடியும் பூமியோ
பிழைத்து நிற்கும்!
சமத்துவ மனிதர்கள் என்றுமே பிழைத்திருப்பர்!
சமத்துவ மனிதருடன் சமன் செய்துகொண்டதனுல்
என்னைப் பெரிதாய் உணருகின்றேன்.

தமிழில்: என். சண்முகலிங்கன்

● மாறியோ டி அந்திராடே (1839—1945): பிரேஸிலின் இந்திய, நீக்கிரோ, போர்த்துக்கேய மூலினக் கலப்புக்கு இலக்கணமாய்ப் பிறந்தவர். 'எதிர்காலத்துவத்தின்' போப்பாண்டவர் எனப் போற்றப்படுபவர் இவரது ஒவ்வொரு கவிதைத் தொகுதிகளும் புதிய புதிய, புரட்சி வெளிப்பாடுகளாக மலர்ந்தன 19 முழுமையான கவிதைத் தொகுதிகளைத் தந்திருக்கின்ருர்.


யாழ். இலக்கியவட்டமும் 'ஈழநாடும்' நடாத்தும்

இரசிகமணி கனகசெந்திநாதன்

நினைவுக் குறுநாவல் போட்டி

✯ முதற்பரிசு: ரூபா 500-00

✯ இரண்டாம்பரிசு: ரூபா 300-00

● அமரர் இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்களின் நினைவாக யாழ். இலக்கியவட்டம் இந்த ஆண்டும் 'ஈழநாடு' பத்திரிகையின் அனுசரணையுடன் குறுநாவல் போட்டி ஒன்றை நடாத்த முன்வந்துள்ளது.

● எழுத்தாளர்கள் யாவரும் கலந்து கொள்ளலாம். ஆக்கங்கள் தங்களது சொந்தப் படைப்புக்கள் என உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

முடிவு திகதி: 30-6-1984

● 'ஈழநாடு' வாரமலர் ஆசிரியருடன் மூவர் நடுவர்களாகக் கடமையாற்றுவர்

அனுப்ப வேண்டிய முகவரி:

இரசிகமணி குறுநாவல் போட்டி,
'ஈழநாடு' வாரமலர்,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

# அபிராமி அந்தாதியின் வேற்பிள்ளை உரையை கி. வா. ஜ. அறியாரா?

**த. சண்முகசுந்தரம்**

தாய்மைக் கடவுள் வழிபாட்டிற்கு யாழ்ப்பாணம் என்றுமே முதலிடம் கொடுத்து வந்துள்ளது. நயினை நாகபூமாள் திருக்கோயில் வரலாற்றுப் புகழ்பெற்றது. இதனைத் தவிர யாழ்ப்பாணத்தில் பெரிதும் சிறிதுமாக அம்மன்கோயில்கள்பலவும் இருக்கின்றன. கிராமிய அடிப்படையில் நடைபெறும் முத்துமாரியம்மன், காளிகோயில்கள் ஆங்காங்கு இருக்கின்றன இதனுல் யாழ்ப்பாணத்தில் தாய்மைக்கடவுள் வழிபாட்டுப் பாடல் பலவும் வாழும் பத்திஇலக்கிய வடிவமாக அமைந்துள்ளன இவற்றில் குறிப்பிட வேண்டியவை இருபிரிவில் அடங்கும்'' தமிழ் நாட்டிலே தோன்றியாழ்ப்பாணத்திற்கு வந்ததாய்மைக் கடவுள் வழிபாட்டுப் பாடல் முதற்பிரிவில் அடங்கும். இரண்டாம் பிரிவிலே யாழ்ப்பாணத்திற்கேசிறப்பான தாய்மைக்கடவுள் ஊஞ்சற்பாட்டு, குளிர்ச்சிப்பாட்டு, தண்டல் பாட்டு, கண்ணகி பாட்டு என்பவை இடம்பெறும். தமிழ்நாட்டிலிருந்துவந்ததாய்மைக் கடவுள் வழிபாட்டுப் பாடல் என்றதும் 'அபிராமியந்தாதி'' என்பதே எவருக்கும் நினைவில்வரும் இதனைப் பாடியவர் அபிராமிப்பட்டர். இவர்வாழ்ந்த காலம்சரியாகத் தெரியவில்லை என்பர்ஆராய்ச்சியாளர். அபிராமிஅந்தாதிப் பாடல்பலவும் யாழ்ப்பாணத்துப் பொதுமக்களின் வாயில் என்றுமே ஒலித்துவந்துள்ளன. இப்பாடல் எங்குயாரால் எப்போது இயற்றப்பட்டது என்பதைத் தெரியாமலேயே பொதுமக்கள் பாடிவருவர் அபிராமிஅந்தாதி யாழ்ப்பாணத்தில் பெற்றுள்ள பெரும் செல்வாக்கையே. இதுஉணர்த்துகின்றது. சுருங்கச் சொன்னால் அபிராமிஅந்தாதிக்கு யாழ்ப்பாணத்தில் அன்று தொடக்கம் இன்றுவரையும் தனிஇடம் இருக்கின்றது. இது என்றுமே இருக்கும் என்பர் அம்பாளின் அன்பர்.

## அபிராமி அந்தாதி

## உரை

இந்த அருமந்த நூலுக்கு முதல்முதல் உரைசெய்த பெருமை யாழ்ப்பாணத்தவர் ஒருவரைச்சாரும். இவர்வட்டுவில் உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை இவர்வாழ்ந்த காலம் கி.பி. 1847—1930. இவரை உரையாசிரியர் எனத்தமிழ் அறிஞர் போற்றுவர், எனினும் இவர் புராணபடனம், மக்கள்கலையாம்காவடி, கரகம், உடுக்குப்பாட்டு போன்ற கலைகளிலும் பெரும்ஈடுபாடுடையவர். காரணம் உண்டு. யாழ்ப்பாணத்தில் புகழ்வாய்ந்தது பன்றித்தலைச்சிஅம்மன் கோயில். இந்தக்கோயில் பொங்கல், மடைபோன்ற விழாக்களில் இளம் வேற்பிள்ளைபெரிதும் ஈடுபடுவார். இவரின்தந்தையார் மட்டுவில் உடையார் கணபதிப்பிள்ளை. பன்றித்தலைச்சிஅம்மன் கோயில் பண்டிகைகளைநின்று நடத்தும் உத்தியோகப் பொறுப்பில் கடமையில் கணபதிப்பிள்ளை உடையார் ஈடுபடுவார், இளம் வேற்பிள்ளையும் தந்தையுடன் இவற்றிலே கலந்துகொள்வார். இங்கு நினைவில்வைக்க வேண்டியது ஒன்று உண்டு, காவல்நிலையம் இல்லாதகாலம் அது, பொலிசார் கெடுபிடி இல்லாமல் தலைமைக்காரர் கிராமிய அலுவல்களை எல்லாம் நடத்துகின்ற நிலமானிய முறைக்காலம் அது, இளம்வேற்பிள்ளையின் காதிலே அபிராமி அந்தாதிப்பாடல் ஒலித்தது. இளம்வேற்பிள்ளை வளர்ந்து முறையாகத்தமிழ்ப் பாடம்கேட்டார். மட்டுவில் சண்முகச்சட்டம்பியார் நல்லூர் கார்த்திகேயஉபாத்தியாயரிடம்கல்விபயின்ருர். பின்னர் தன்குருவாக வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, ஆறுமுகநாவலர் ஆகியோரைப் பெற்றபெரும் பாக்கியம் உடையவர். இக்குடும்பத்தினரின் தமிழ்த்தொண்டு மிகவும் புகழ்வாய்ந்தது. இதனை விரிவஞ்சிவிடலாம். இருந்தும் நால்வரின் பெயரை என்ருலும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும் ஒருவர் சைவப் பெரியார் சித்தாந்தப் பெருங்கடல் சு. சிவபாதசுந்தரம். இவர் ம.க. வேற்பிள்ளைக்கு மைத்துனர். திருமதி வேற்பிள்ளையுடன் பிறந்தவர். மற்றவர் யாழ்ப்பாணத்து இந்துக்கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ம.வே. திருஞானசம்பந்தபிள்ளை. உரையாசிரியர்; கட்டுரையாசிரியர்; கதையாசிரியர் ''இந்துசாதனம்'' இதழ் ஆசிரியர் இவர் ம.க. வேற்பிள்ளையின் மூத்த மகன். நடுவில்மகன் குருகவி மலயருவி மகாலிங்கசிவம், சேர். போன். இராமநாதனுடன் இருந்துதமிழ் ஆராய்ந்தவர். கோப்பாய் ஆசிரியகலாசாலையில் தமிழ் அருவியாக இருந்து கலங்காமல் தமிழ் ஓட்டம் ஓடியவர். நாலாவது பெரியார் இன்றையபண்டிதமணி இலக்கியகலாநிதி சி. கணபதிப்பிள்ளை. இவர் வேற்பிள்ளையின் நெருங்கிய உறவினர்.

## ம.க. வேற்பிள்ளையின்

## பணி

இளம் வேற்பிள்ளை மட்டுவிலேதன் வயல் வேலைகளை அட்டாலையில் இருந்து கொண்டு கவனிப்பார். ஒரு பால் அட்டாலையில் இருந்து தொல்காப்பிய வகுப்பைத் தமது மாணுக்கருக்கு நடத்துவார். இடையிடையே அரிவுவெட்டுச் சிந்தைத்தொழிலாளர் பாடப்பாடக் கேட்டு மகிழ்வார்; தமிழைக்கற்பதையே தன்தொழிலாகக் கொண்டவர். தமிழைக்கற்பிப்பதையே தன்பணியாகமதித்தவர் தமிழ் கற்பித்துப் பொருள் நட்டங் கண்டவர் இவர்நிறுவிய சந்திரமௌலீசுவரர் தமிழ்ப்பாடசாலை நட்டம்கண்டது. ஆங்கிலேய ஆட்சியாளர் அப்பாடசாலைக்கு மானியம் வழங்க மறுத்தனர். காரணம் புறமதத்தார் தூண்டுதல், அவர் விரித்தவலையில் இந்தச்சைவத் திருக்கொம்பன் சுருமீன்சிக்க மறுத்தது. இந்தச் சுருமீன் வேற்பிள்ளை, தன் பாடசாலையை மூடிவிட்டுப்பாக்கு நீரிணையைக்கடந்து சிதம்பரத்தை அடைந்தது. அங்கு ஆறுமுகநாவலர் தமிழ்க்கலாசாலையில் தலைமைத்தமிழ்ப் பண்டிதராக இருந்தது. அதிகாலையில் ஆடல்வல்லானை வணங்குதல்; பகல்வேளையில் பாடஞ் சொல்லுதல். தமிழும் சைவ சித்தாந்தமும் வேற்பிள்ளைக்கு உகந்தவை, பிற்பகலில் புராணபடனம், மாலையில் மீண்டும் ஆடல்வல்லானையும் அம்பிகையையும் வணங்குதல் இவைதான் வேற்பிள்ளையின் குறிக்கோள். புராண படனம் என்ருல் தன் பெரும் புலமையை விடுத்துப் பொது மக்களும் விளங்கக்கூடியவகையில்அதனை நடத்துவார். இத்தகைய பெரியார் அபிராமி அந்தாதிக்கு உரை செய்தார்.

## முதலாவது

## உரை

நிற்க நாவலர் தொடக்கம் இற்றைவரை ஈழத்து இலக்கிய வளர்ச்சியை 'ஏனோதானோ' 'அக்கரைச் சீமை இலக்கியம்' என நோக்கும் ஒருசாரார் வடக்கே இருக்கின்றனர். அந்தக் காலத்தில், தென்னுட்டுக் கலைச் செல்வர் தமிழ்த்தாத்தா அதிஉத்தமர் சாமிநாதையர். இந்த அதிஉத்தமரின் உத்தம மாணுக்கர் இன்றைய சிவவாகீசர் கி வா ஜகந்நாதன். இவர் அபிராமி அந்தாதிக்கு அண்மையில் உரை செய்தார். இது மிகவும் வரவேற்க வேண்டிய முயற்சி. ஆனுல் இதில் ஓர் ஏமாற்றம். அறிந்தோ அறியாமலோ சிவவாகீசர் ஒன்றைச் செய்து விட்டார். அபிராமி அந்தாதிக்கு முன்னர் உரை ஒன்று இருந்தது; அதுவும் யாழ்ப்பாணத்தவர் ஒருவரால் செய்யப்பட்டது என்ற சிறு குறிப்புக் கூட இல்லை. இங்ஙனம் சிறப்பாகத் தமிழ்த் தொண்டு புரிந்த உத்தமர் உரையாசிரியர் மட்டுவில் மகவேற்பிள்ளையின் தொண்டு மறக்கப்படுகிறது; அல்லது மறைக்கப்படுகின்றது இதனை இந்தத் தலைமுறை யாழ்ப்பாணத்துத் தமிழியல் மாணவர் அறிதல் வேண்டும். ம.க.வேற்பிளளை என்ன செய்தார் அப்படியெல்லாம்!', எனவும் வடக்கே இருந்து யாராவது கேட்கலாம் ம.க.வேற்பிள்ளை திண்ணைப் பள்ளி ஆசிரியர்; சைவ சித்தாந்தப் பெருங்கடல்; நாவலர் வழி நின்றவர். அவரின் தமிழ்க் கலாசாலையில் சிதம்பரத்தில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக இருந்தவர். 'புலியூரந்தாதி' .அபிராமியந்தாதி' 'கெவுளிநூல் விளக்கவுரை' 'திருவாதவூரர் அடிகள் புராணவிருத்தியுரை' 'வேதாரணிய புராணக் குறிப்புரை''அபிராமியந்தாதியுரை, 'ஆருயிர்க் கண்மணி மாலை, 'ஈழமண்டல சதகம், ஆகிய நூல் செய்தவர். தமிழைத் தமிழாகக் கொண்ட பெருங்குடிமகன். இவரைப் பற்றி யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகம் ஆராய முன் வர வேண்டும். வேற்பிள்ளையின் அபிராமியந்தாதி உரையையும், ஜகந்நாதன் உரையையும் ஒப்புநோக்கி ஆராய்தல் ஒரு பயனுள்ள முயற்சி. அந்த நல்ல நாளை எதிர்நோக்கி நிற்போமாக.

> அபிராமி அந்தாதிக்கு உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளையினுல் உரை ஒன்று முன்னரே எழுதப்பெற்றுள்ளது. அதற்குப்பின்னர் அபிராமிஅந்தாதிக்கு உரை எழுதிய கி. வா ஜகந்நாதன் முன்னர் ஒரு உரை இருந்ததுபற்றித் தமது உரையில் குறிப்பிடத் தவறிவிட்டார்.

## 'இப்போ நான்தான் ராஜா'

விஸ்வநாத்தாஸ் தமிழகத்தில் 20ம் நூற்ருண்டின் முற்பகுதியில் வாழ்ந்த மாபெரும் நாடகக் கலைஞர். இவர் ஒரு தடவை 'ராஜா' வேடத்தில் நடித்துக்கொண்டிருந்தார். அப்போது ஒரு ஆங்கிலேயச் சிப்பாய், சுதந்திர வேட்கையை இவர் ஊட்டுவதாகக் கூறி இவரைக் கைது செய்ய வந்தான். ஆனுல் விஸ்வநாததாஸ் மேடையில் நின்றபடி ''இப்போ நான்தான் ராஜா நீயொரு வெறும் சிப்பாய். இந்த இடத்திலிருந்து அகன்றுவிடு'' என்று உரக்கக் கத்தினுர். அச்சிப்பாயும் அவ்விடத்திலிருந்து மெதுவாக நழுவிவிட்டான். இப்பெருங் கலைஞர் தமது மேடை நாடகமொன்றிலேயே உயிர் நீத்தார். இவர் ஆங்கிலேயர் வழங்க முன்வந்த பல சலுகைகளையும் உதறித் தள்ளி இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு தமது பங்களிப்பை பெருமளவு வழங்கினுர்.

மதுரையைச் சேர்ந்த நாடகக் கலைஞர் திரு. கே. ஏ. தங் வேலு கடந்த வாரம் இந்திய வானெலியில் வழங்கிய பேட்டியில் இதைக் கூறினுர்.

- அனந்த்

## பாரதி வேண்டுதல்

''விசையுறு பந்தினைப்
போல் உள்ளம்
வேண்டியபடி செல்லும்
உடல் கேட்டேன்''
- பாரதியார்

பவர்ஸ் உரம்
அதிக விளைச்சலுக்கும்
கூடிய இலாபத்துக்கும்
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1. தொலைபேசி: 20551-6
MASTERS ABC 4/82 (C)




புதிய உத்வேகத்தினால் உடலில் எழுந்த பரபரப்பை அவரின் வயோதிபத்தால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

இலேசான காய்ச்சல்இருமலுடன் தோன்றிய நோய் அவரைப் படுக்கையில் வீழ்த்தி விட்டது.

இன்றுகுணமாகும் நாளை குணமாகும் என்றுதான் அவரின் குடும்பத்தினர் எதிர் பார்த்தனர். ஆனால் அப்படி நடக்கவில்லை.

முதலில் உப்புமாவடி டாக்குத்தர் பார்த்தார். முடியவில்லை

அடுத்து இன்னொரு பெரிய டாக்குத்தர் பார்த்தார் முடியவில்லை

தரும ஆசுப்பத்திரி என்றும் பார்க்காமல் அதில்இருந்த சிங்களடாக்குத்தர் ஒருவரிடம் தனியாகக் காட்டினார். அவராலும் முடியவில்லை ஆங்கில வைத்தியர்கள் கைவிட்டுவிட ''தமிழ்வைத்தியம் செய்தால் சரிவரும்'' என்று துறவிஒருவர் சொல்லவே சுதுமலைப் பரியாரியாரிடமும் காட்டியாயிற்று. இதற்கும் நோய் குணமாகவில்லை

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சொல்லப்பட்ட ஆங்கில, தமிழ்வைத்தியர்கள் எல்லாரும் பார்த்து முடிந்தது, கொழும்பிலிருந்து விசேஷமாக தருவிக்கப் பட்டவைத்தியர்களும் பார்த்தாய்விட்டது நோய் ''சோமரைவிட்டுப் போகமாட்டேன்'' என்று முடிவாகவே சொல்லிவிட்டது.

இடையிலே இடைத்தேர்தலும் ஒன்று வந்தது.

அவரின் அரசியல் நண்பர்கள் சிலர்அவரை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட ஆவன செய்தனர். ஆனாலும் விமானத்தில் வெளிநாடுசென்று வர உடல்நிலைக்குத் தெம்பு இருக்கவில்லை; விட்டுவிட்டனர். ஆனால் நொமினேசன் அன்றுஅவரை மேடையில் ஏற்றியே விட்டனர். தன்னை நோக்கிச்சாவு விரைந்துவருவதாகச் சோமசுந்தரத்தார் உணர்ந்து கொண்டார்.

★

விடிந்ததும் விடியாததுமாக ஒருநாள் சோமசுந்தரத்தாரின் பேரப்பெடியன் பண்டாரி வீட்டுத் தகரப் படலையைத் தட்டிக்கொண்டிருந்தான்.

வெள்ளாப்போடு எழுந்து வீட்டுக்குடிசைக்கு முன் திண்ணையிலே இருந்து வெற்றிலை துவைத்துக் கொண்டிருந்த பண்டாரி போர்த்து மூடிக் கொண்டுஎழுந்து வந்துபடலைக் கட்டை அவிழத்துத் திறந்தபோது வெளியே நின்று படலையைத்தட்டிய இளைஞனை அவனுக்கு அடையாளந்தெரியவில்லை.

வந்தவனே சோமசுந்தரத்தார் உடனடியாகப் பண்டாரியை வரச்சொன்ன தகவலைச் சொல்லிவிட்டு, சயிக்கிளில் பறந்துவிட்டான்.

போர்வையை நீக்கி உடலை நிமிர்த்திப் புதிய உற்சாகத்தோடு பண்டாரி சோமசுந்தரத்தார் வீட்டுக்குச்சென்றான்.

சோமசுந்தரத்தாரின இருமலும் இழுப்பும் வெளிக் கேற்றுவரை கேட்டது.

வெளிவிறுந்தை ஓரம்வரை வந்த பண்டாரி படியோரம் நின்று விக்கிக்கொண்டிருந்தான். அவனுக்கு அடக்கமுடியாத துயரம்வந்து விட்டது

சோமசுந்தரத்தாரை சூழ்ந்துகொண்டு கிழடும் கட்டைகளுமாகப் பல பெண்கள் இருந்தனர்.

'பண்டாரிக்கு வெத்திலை குடுங்கோ!'' என்று சோமசுந்தரத்தாரின் மனைவி ராசாத்தி அம்மாளின் குரல் கேட்டது

வேறொருகிழவி வெற்றிலைத் தாம்பாளத்தை எடுத்து வந்து, அதிலிருந்த வெற்றிலை ஒன்றினையும், அதுநிறைந்த பாக்குச்சீவலையும் எடுத்துச் சுருட்டி பண்டாரியின் கையில் வைத்தாள். . எங்கேவெற்றிலைத்தாம்பாளத்தில் பண்டாரியின் கைபட்டுவிடுமோ' என்ற பயம் அவளுக்கு!

''மாமாகடைசியிலை பண்டாரியைப்பார்க்கத்தான் ஆசைப் பட்டார்! மாமா மாமா! இஞ்சை டண்டாரியெல்லே வந்திருக்கிறான். கண்ணை முளிச்சுப்பாருங்கோமாமா'' என்று சோமசுந்தரத்தாரின் மூத்த மருமகள் கூறினாள்.

சோமசுந்தரத்தார் தலையைச்சற்று உயர்த்திப் பண்டாரிபக்கமாகச் சரிந்து, மேல்மூச்சுக் கீழ்மூச்சுவாங்கிக் கொண்டே மேலிருந்து கீழ வரைபண்டாரியைக் கண்களால் அளந்தார்.

## தொடர் நவீனம்

பண்டாரியும் விம்மலுடன் சோமசுந்தரத்தாரைப் படுக்சையில்வைத்தே கண்களால் அளவெடுத்தான்.

சோமசுந்தரத்தாரின் கண்கள் பஞ்சடைந்து கிடந்தன. தாடி நீண்டு வளர்ந்து வெண் துகிலாகிக் கிடந்தது.

மரணக்குறி முகத்தில் ஒட்டிக் கிடந்தது.

திண்ணை ஓட்டுக்கு வெளியே நின்றிருந்த பண்டாரியைச் சோமசுந்தரத்தார் கையசைத்துச் சமீபத்துக்கு அழைத்தார்.

கூனிக்குறுகி விம்மிக் கொண்டே பண்டாரி அவருக்குப் பக்கத்தே போனான்.

''சுகமாயிருக்கிறியே பண்டாரி?'' என்று மெதுவாகக் குசலம் விசாரித்தார் சோமசுந்தரத்தார்.

பண்டாரி மௌனமாகவே 'ஓம்'என்ற பாவனையில் தலையை அசைத்தான்.

சோமசுந்தரத்தார் சற்றுவேளை கண்களை மூடிக்கொண்டார்

நோய் கடுமையாகியநாளிலிருந்து அவர் இப்படி ஒருநாளைக்கு நான்கைந்து தடவைகள் வேண்டுமென்றே கண்களை மூடிக்கொண்டு பின்பு திறக்கும்போது, யாரும் எதிர் பார்க்காத புதிதான ஏதாவதைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார். அதிலிருந்து வேண்டுமென்றே கண்களை மூடி, நெற்றிச் சுருக்கத்தைப் புடைப்பாராயின் ஏதோ அதிகமாகச் சிந்திக்கிறார் என்றுதான் கொள்ள வேண்டும்!

பண்டாரி நட்ட கட்டையாக நின்றான்

சோமசுந்தரத்தார் கண்களைத் திறந்தார்.

''பண்டாரி, இண்டைக்கொருக்கா நீ என்னை உன்ரை றிக்சோவிலை வைச்சு இழுக்க வேணும்; எனக்கு ஆசையாக் கிடக்கு! போய் றிக்சோவைக் கொண்டோடியா!''

இது வரை அனுங்கி முனகிக் கொண்டிருந்தவருக்கு எங்கிருந்துதான் இந்த அதிகாரத் தொனி வந்ததோ?

சற்று வேளைக்குப்பின் ''போ போ'' என்ற பாவனையில் கையை அசைத்துக் காட்டினார்.

''ஓம் இப்ப கொண்டு வாறன்!'' என்று மட்டும் தான் பண்டாரி பேசினான்; திரும்பிவிட்டான்.

★

ஒதுக்குப்புற மாலுகக்குள் நின்ற றிக்சோவைப் பண்டாரி வெளியே எடுத்தபோது அதன் சில்லுச் சிலைக்கம்புகள் சில இணைப்பிலிருந்து விடுபட்டுத் தொங்கின.

நீண்டகாலமாக இருப்பில் இருந்ததால் அவை உக்கி நெகிழ்ந்திருக்க வேண்டும்!

சில்லுகள் எண்கோணமாக நின்றன.

இழுக்க முடியாது போல இருந்தது.

பண்டாரிக்கு மனது திடுக்குற்றுவிட்டது.

''ஏனெணை அப்பா உதை எடுக்கிறாய்?''

இப்படிப் பண்டாரியின் பேரப்பெடியன் ஒருவன்கேட்டான்.

''அதுஒரு தேவைக்குத் தானடா எடுக்கிறன்!''

பண்டாரி பல்லுப்போன பொக்குவாய்குரலில் பேரனின் கேள்விக்குப் பதில்சொன்னான்

ஒருமாதிரி சில்லுகள் குடக்கடிக்க, றிக்சோவை இழுத்து முற்றத்தில் விட்டுவிட்ட பண்டாரி அதன் அங்க மெல்லாவற்றையும் நிதானமாகச் சுற்றிவந்துவந்து. பிடித்துப் பிடிதது ஆட்டிஆட்டிப் பரிசோதித்துப்பாத்தான் சில்லுகளைத்த விரமற்றப்படி பரவாயில்லை!

சுருககிச்கிடந்த கூடாரத்தை இழுந்துப்பரப்பினான். அதில்பல இடங்களைப் பூச்சி அரித்து ஓட்டைகளை உண்டாக்கி இருந்தன.

தோளில் சவுக்கத்தை எடுத்துத் தூசுதட்டி, எல்லாவற்றையும் சுத்தப்செய்து விட்டுக் கிணற்றடிக்குச் சென்றவன் பேரப்பிள்ளைகளின் உதவியுடன் இரண்டுவாளி தண்ணீரை இழுத்துவந்து, றிக்சோவைக் கழுவத்தொடங்கி விட்டான்.

பேரக்குழந்தைகள் யாவும் அவனையும், றிக்சோவையும் சுற்றிச் சுற்றிநின்றன.

அப்போதுதான் வெளியே புறப்படத்தயாரான இளையவன் ''ஏனப்புஇப்ப இதெல்லாஞ் செய்கிறாய்?'' என்று கேட்டான்

பண்டாரி எதுவும் பேசவில்லை

தான் றிக்சோ இழுக்கஇளையவன் சம்மதிக்கமாட்டான் என்று அவனுக்குத் தெரியும்.

இளையவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அதைப்பற்றி மேலும் எதுவும்விசாரிக்காமல் அவன் வெளியேபோய்விட்டான்.

''ஏனெணை அப்பா, கழுவிறாயா?''

இப்படி பேரப்பெட்டை கெட்டாள்.

பண்டாரி இதற்கும் ஒன்றும் பேசவில்லை.

தகப்பனின் போக்கைச்சற்று அவதானித்து விட்டு ஏதோநடக்கப் போகிறது என்றநினைப்பில் ''என்னெத்துக்கெணை உந்த அவசரமில்லாத வேலையை மினக்கெட்டுச் செய்கிறாய்?'' என்றுசற்று அச்சுறுத்தல் தொனியில் கேட்டாள் மூத்தமகள்.

''தேவைக்குத்தான் செய்யிறன்' நீஅங்காலைபோ?'' என்று பண்டாரி பதில்சொல்லிவிட்டான்.

மருமகன் சயிக்கிளில் கல்லரியும் அச்சொன்றினையுங் கட்டிக்கொண்டு வந்து சேர்ந்தான் மாமன் றிக்சோவைக் கழுவிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு ''உதென்னத்துக்காம் கொப்பர் றிக்சோவைக் கழுவுறார்?'' என்றுமனைவியைக் கேட்டான்.

''ஏனென்டு மனிசன் சொல்லமாட்டன் எண்ணுது' என்று அலுத்துக்கொண்டே அவன் மனைவி பதில் சொன்னாள்.

தன்னோடு மருமகன் நல்ல அன்பென்றும், தான் சொல்பவைகளுக்கு எப்போதும் மதிப்பளிப்பவன் என்றும் பண்டாரிக்கு நன்கு தெரியும். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ''எங்கடை கொட்டடிச் சோமர் தன்னை ஒருக்கா நான் றிக்சோவிலை வைச்சு இழுக்கவேணுமெண்டு ஆசைப் படுறார் தம்பி அதுதான்...''

பண்டாரி இழுத்தபடியே பேச்சை நிறுத்திக் கொண்டான்.

''இதென்ன பரிசுகேடு! உதை விட்டு இப்ப எத்தினை வருசமாச்சு! உதை இப்ப இவர் இழுத்தா நாங்கள் மற்றவையின்ரை முகத்திலை முளிக்கிறேல்லையே!'' என்று மாமன் முகத்தைப் பார்க்க முடியாமல் மனைவியின் முகத்தைப் பார்த்தே கூறினான் மருமகன்.

''நீங்கள் ஆர் மறிச்சாலும் சரி, என்னைக் கொண்டாலும் சரி நான் இண்டைக்கு அவரை வைச்சு இழுத்துப்போட்டுத் தான் மற்றவேலை பாப்பன்''

இப்படி இரைந்துகொண்டே பண்டாரி படலையைத் திறந்து கொண்டு வெளியே போய் விட்டான்.

★

பண்டாரி வீட்டுக்கு வர நேரம் மத்தியானத்திற்கு மேலாகிவிட்டது.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது.

பண்டாரிதனியாகவரவில்லை. யாரோ ஒரு கொல் வேலை செய்பவனுடன் வந்தான்

ஒரு மணி நேரத்துக்கிடையில் சில்லுச் சிலைக் கம்புகள் சீர் செய்யபட்டு விட்டன.

தகடுகள் பொருத்த வேண்டிய இடங்களுக்குத் தகடுகள் பொருத்தி, ஆணிகள் அடிக்க வேண்டிய இடங்களுக்கு ஆணிகள் வைத்து அந்த றிக்சோவை உருப்படியாக்கின கூலிக்காக தனது வல்லுவத்தை எடுத்து சுற்றுக் கயிறு அவிழ்த்துப் பொக்கணைக்குள் கையை வைத்துப் பணத்தை எண்ணிக் கொடுத்துக் கூட வந்தவனை வழியனுப்பி வைத்துவிட்டுத்தான் பண்டாரி திண்ணையில் அமர்ந்து சற்று ஓய்வெடுத்துக் கொண்டான்

''அம்மான்! காலமை துவங்கி ஒண்டும் தின்னேயில்லைப் புளிக் கஞ்சி காச்சிக் கிடக்கு எப்பன் குடியுங்கோவன். என்று மூத்தவனின் மனைவி கேட்டதற்கு, எனக்கு பசிக்கேல்லை; நான் திண்டிட்டன்; கடையிலை திண்டிட்டுத் தான் வாறன்!'' என்று பண்டாரி பதில் சொன்னான்'

# 13

சற்று வேளை ஓய்வுக்குப் பின் எழுந்த பண்டாரி றிக்சோ அண்டை போய், அதை ஒரு சுற்றுப் பார்த்துத் திருப்தி கண்டு, ஆசனத் தட்டு மெத்தைக்கு மேல் நேற்றுத் தான் கழுவிக் காயப்போட்டிருந்த வெள்ளைத் துவாயை எடுத்து மடித்து உயர்த்திப் போட்டு கிணற்றடிக்குக் சென்று மேல் கால் கழுவி போக்குவரத்துக்குக் கட்டுவதற்கான அந்த ஆயிரத்து எழுநூற்று மூன்று வேட்டியை எடுத்து மடித்து உடுத்தி, சண்டிக் கட்டை மடித்து முடிச்சுப் போட்டுக் கொண்டு சவுக்கத் துண்டினால் குஞ்சம் விட்ட தலைப்பாகைக் கட்டி... றிக்சோவைத் தூக்கி இடக்கரத்தைப் பின் தள்ளி இடப்பக்க ஏற்காலை இறுகப் பிடித்து... வலக்கரத்தை ஏற்காலின் விலாப்புற நடுப்பகுதியில் பலமாக ஊன்றி—

—பண்டாரி றிக்சோவுடன் புறப்பட்டு விட்டான்.

இப்போது அவனின் கூனல் நிமிர்வு கண்டு விட்டது.

(அடுத்த வாரம் முற்றும்)

## பக்கிங்ஹாமுக்கு

## இஸ்ரேல் வேலி

லண்டன் 'பக்கிங்ஹாம்' அரண்மனை உல்லாசப் பயணிகளின் கவனத்தை ஈர்த்ததொன்று. ஆயினும் இதன் பாதுகாப்பு நிலைமைகள் கடந்த சிலகாலம் பாதிக்கப் பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் அதிகாரிகள் இதுகுறித்துநடவடிக்கைகள் எடுத்தார்கள். இறுதியாக இந்த நிலைமையைச் சீர்செய்ய இஸ்ரேலில் இருந்து 'பக்கிங் ஹாம்' அரண்மனைக்கென 'எலெக்ரோனிக்' வேலியொன்றை வாங்கியுள்ளார்கள். விசேட தடுப்புச் சக்தியுடைய இவ் வேலி இஸ்ரேலிய விமானத் தயாரிப்புத் தொழிற்சாலையொன்றில் தயாரானது. இதன் பெறுமதி 2 கோடி அமெரிக்க டொலர்களாகும்.

அனாந்த்

இலங்கை அரசியலில்
உறவுகளும் பிரிவுகளும் - 11

# இரு துருவங்களான ஜி. ஜி. யும் செல்வாவும் ட்ரயல் அற்பார் வழக்கில் சேர்ந்து வாதாடினர்

எஸ். எம். கோபாலரத்தினம்

1976-ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் தேதி வட்டுக்கோட்டையில் பண்ணுகம், என்றஊரில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் முதல்மகாநாட்டில் திருவாளர்கள் எஸ்.ஜே வி செல்வநாயகம், ஜி ஜி. பொன்னம்பலம், எஸ். தொண்டமான் அகியோர் கூட்டணியின் தலைவர்களாகத் தெரிவுசெய்யப் பெற்றனர்

திரு ஜி. ஜி பொன்னம்பலம் இதுபற்றி எவ்விதகருத்தும். வெளியிடவில்லை அவர் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளவும் இல்லை. ஜி ஜி. கூட்டணித் தலைமையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றுதமிழ் காங்கிரஸில் ஒரு பிரிவினர் கூறிவந்தனர் ஜி ஜி.யின் சம்மதத்துடனேயே அவரும் தலைவராகதெரிவு செய்யப்பெற்றார் என்று கூட்டணியினர் கூறி வந்தனர்

ஜி ஜி எவ்விதக் கருத்தும் வெளியிடாமலே இருந்துவந்தார்.

## எம். பிக்கள்

## கைது

வட்டுக்கோட்டைத் தீர்மான வாசகத்தை துண்டுப் பிரசுரமாகப் பதித்து மக்களுக்கு விநியோகித்த திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், வ.ந. நவரத்தினம், கா.பொ. இரத்தினம், க. துரைரத்தினம் ஆகிய கூட்டணி எம்பிக்கள் நால்வரும் கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீதுஇராஜத்துரோகக் குற்றம். சாட்டி',வழக்குத் தொடரப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரின் முன்னிலையில ஜூரிமார் இல்லாமல் ட்ரயல் அட்பார்' முறையில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டது

1976:ஆம்ஆண்டு மேமாதம் 31- ஆம்திகதி இந் நால்வர் மீதும் குற்றம் சாட்டப் பட்டது

1976- ஆம்ஆண்டு யூன்மாதம் 18ஆம்தேதி வழக்குவிசாரணை ஆரம்பமானது.

இவ்வழக்கில் நான்கு எம் பிக்களின் சார்பிலும் ஆஜராகிவாதாடுவதற்கு வெளி நாட்டில் இருந்து பிரபல வழக்கறிஞர்களில் ஒருவரை ஏற்பாடு செய்து அழைக்கலாம் என்றயோசனையும் தெரிவிக்கப்பட்டது.

ஆனல் இந்தவழக்கில் திரு ஜி.ஜி.பொன்னம்பலம் நான்கு கூட்டணிஎம்பிக்களின் சார்பிலும் ஆஜராகிவாதாடுவதற்கு ஒப்புக்கொண்டதும் வெளிநாட்டு வழக்கறிஞர்ஒருவரைத் தேடும்யோசனை கைவிடப்பட்டது.

## எஸ். ஜே. வி.

## தலைமையில்

மூதறிஞர் எஸ்.ஜே,வி.செல்வநாயகம் தலைமையில் திரு ஜி ஜி. பொன்னம்பலம், தி மு. திருச்செல்வம் திரு வி எஸ்.ஏ புள்ளநாயகம் ஆகியோர் வாதாடுவதென்று தீர்மானிக்கப்பட்டு மூவரும்மூன்று கோணத்தில் வாதிடுவதெனத் தீர்மானித்தனர்.

இவ்வழக்கில் நான்கு கூட்டணி எம்.பிக்களுக் காகவு தோன்றி வாதாடுவதற்குத் திரு ஜி. ஜி பொன்னம்பலம். முன்வந்ததும் கூட்டணியின் தலைமைப்பதவியை ஜி.ஜி ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்று சில இளவட்டாரங்களில் எழுந்தத சர்ச்சை நின்றுவிட்டது

இந்த வழக்கில் நான்கு எம்.பிக்களின் சார்பிலும் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட வழக்கறிஞர்கள் நீதி மன்றத்தில் தோற்றினர்.

## பிரிந்தவர் கூடிய

## காட்சி

திரு எஸ்.ஜே வி. செல்வநாயகத்தை அரசியலுக்குக் கொண்டு வந்தவர் திரு.ஜி ஜி பொன்னம்பலம். 1947 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திரு. ஜி ஜி பொன்னம்பலத்தின் தலைமையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளராகக் காங்கேசன் துறைத் தொகுதியில் திரு எஸ். ஜே. வி செல்வநாயகம போட்டியிட்டுப் பாராளுமன்றத்துக்குச் சென்றவர்

1949 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் திரு. செல்வநாயகம் தமிழ்க் காங்கிரசிலிருந்து பிரிந்து திரு கு. வன்னியசிங்கம், டாக்டர் இ எம் வி.நாகநாதன் ஆகியோருடன் சேர்ந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியை அமைத்துக் கொண்டார். அப்போது மாணவனுக இருந்த திரு. அ.அமிர்தலிங்கமும் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து கொண்டார்:

அரசியல் மேடைகளில் இரு தரப்பினரும் கடுமையாக ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர்

## இரு துருவங்கள்

திரு ஜி.ஜி.பொன்னம்பலமும் திரு எஸ்.ஜே வி. செல்வநாயகமும் அரசியலில் இரு துருவங்களாக மாறிய பின்னர் எந்த ஒரு வைபவத்திலும் ஒன்று சேர்ந்ததில்லை.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் தேதி பிரதமர் திரு. எஸ். டபிள்யு.ஆர். டி பண்டாரநாயகா பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதாவை கொண்டு வந்த போது பாராளுமன்றத்துக்கு முன்னல் திரு. எஸ் ஜே. வி செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சி எம்.பிக்களும் தொண்டர்களும் சத்தியாக்கிரகம் செய்தபோது திரு. ஜி ஜி. பொன்னம்பலமும் அங்கு சென்று அவர்களுடன் சத்தியாக்கிரகத்தில் சிறிது நேரமே கலந்து கொண்டார்.

1957 ஆம் ஆண்டில் சிங்கள 'ஸ்ரீ' எதிர்ப்பு இயக்கம் சம்பந்தமாக யாழ். முற்றவெளியில் தமிழ் ஸ்ரீ இலக்கத்தைப் பொறித்து மோட்டார் பவனி நடத்துவதற்கு இரு தலைவர்களும் தொண்டர்களும் கூடிய போதிலும் முடிவில் இரு தலைவர்களும் வெவ்வேறு திசைகளிலேயே தமது மோட்டார் வாகனங்களைச் செலுத்திச் சென்றனர்.

(10ம் பக்கம் பார்க்க)

# பிரபந்தங்கள் பாடிய புலவர் குஞ்சு

க. சி. குலரத்தினம்

தமிழில் எழுந்த அந்தாதி இலக்கியங்கள் ஏறக்குறைய 108 எனக் கணக்கிட்டுள்ளார்கள். இவற்றுள் இருபத்தேழு அந்தாதிகள் ஈழத்தில் எழுந்தனவாகும். இவற்றுள் இரண்டு அந்தாதிகளைப் பாடியவர் குஞ்சுப்புலவர். அவர்நல்லூரில் ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த வில்வராய முதலியாரின மைந்தர். அவரின் வீடுமுடமாவடியையடுத்த சொனறலடிவைரவ கோயிலடியில் இருந்தது

வில்வராய முதலியாரின் இளையமைந்தரின் இயற்பெயர் செயதுங்கமாப்பாண முதலி என்பதாகும் ஆனல் எல்லோரும் அவரை அன்பாதரவோடு எங்கள் சின்னத்தம்பி என வழங்கி வந்தனர். அவர்குறும்புத்தனம் நிறைந்வர.

## வல்லக்குமுதவியும்

## பெற்றதந்தை

வில்வராய முதலியார் ஒல்லாந்தர் பரிபாலனகாலத்தில் கச்சேரி முதலியாராயிருந்ததோடு, ஐசாக் ஸ்என்னும் அதிகாரி, யாழ்பாணத்தாரின தேசவழமையைத் தொகுத்த போது உதவியாயிருந்த முதலிமாருள் ஒருவராயும் இருந்வா மறறொருவர் அவரின் நண்பர் சந்திரசேகரமாணு முதலியாராவர். வில்வராயர் அரசகாரியங்களுக்குப் போய் வருவதற்குப் பல்லக்கு முதலிய வசதிகளும் இருந்தன. அவர் உத்தியோக அலுவல்களின்பின் தமிழ்ப்புலவர்களோடு கூடிக் கலந்துரையாடுவதிலும், பாக்கள் இயற்றுவதிலும், பாவலர்களுக்குப்பரிசுகள் கொடுப்பதிலும் ஈடுபட்டிருந்தார். அவரின் வீட்டுச்சூழல் அமைதியாயிருந்தது மங்கலகரமாகப் பூத்துச் சொரியும் கொன்றை மரம் ஒன்று அவர் வாசலை அலங்கரித்தது. மாளிகை போல வீடிருந்த போதிலும் அவர் கொட்டில் ஒன்றைப்படிப்பகமாகக் கொண்டிருந்தார்.

தந்தையார் அரசவுத்தியோகம் அதிகாரம், அறிவு, திறமை, ஆராய்வு எல்லாம் பெற்றிருக்கவும், அவரின் இளையபிள்ளை சின்னத்தம்பி, கிரகங்களின் கோளாறு காரணமாகப் போலும், பள்ளிக்குப் போவதைவெறுத்து, மறைந்துஒழித்துவிளையாடிவந்தார். மாடுமேய்க்கும் சிறுவர்களுடன் மகிழ்ந்து கூடிக் கதைகள் பேசுவதில் தனிச் சுவைகண்டவருக்குத் தாயார் இரக்கங்காரணமாக இரகசியமாக உணவுகொடுத்து வந்தார். அதுதாய்மைக்குணம். தவிர்க்கமுடியாதபண்பு.

பாவினங்களுள்வெண்பாவே உயர்ந்தது அதுபண்பாடானது என்பர் பெருந்தேவனார் வெண்பா, நளவெண்பா என்பனசுவை நிரம்பிய வெண்பாக்கள். இந்த வகையிலமைந்த அருமையான நேரிசைவெண்பா வொன்றை ஏழு எட்டு வயதுச்சிறுவன், அதிலும்பள்ளிக் கூடத்துப்படியிலும் ஏருதவன் பாடினுன் என்ருல, பல்கலைக்கழகப்பட்டதாரிகள் ஏங்காமல் என்ன செய்வது யாப்புத்தண்டிகற்ற பண்டிதர்மார் அதுதங்கள் ஏகபோகவுரிமையன்ருே எனக் கூருமல் என் செய்வர்?

தமிழ் நாட்டு வித்துவான் ஒருவர், வில்வராய முதலியார் மீது சில தனிப்பாடல்கள் பாடிக் கொண்டு, அவரோடு கலந்துரையாடிப் பரிசு பெற்றுப் போவதற்கு நல்லூருக்குச் சென்ருர். நல்லூரில் முதலியாரின் வீடு எவ்விடத்தது என்பதை அவர் கொஞ்சம் செந்தமிழில் அதுவும் செய்யுள் வழக்கில் சில சொற்கள் கொண்டு மாடு மேய்க்கும் சிறுவரிடமே விசாரித்தார். ''மங்காய், மங்காய் இம்மாதுளங்கனியின் கிரயம் யாதோ? என்றும், ''இவ்வுழிச் செல்லுழி எவ்வழி ஏகலாம்'' என்றும் வினுவியவர்களும் இருந்தார்கள். ''வாய்க்கு இதமான பண்டங்கள் பிறர்புசித்தலாகா'' என்று கூறித் தமது முற்றத்து அம்பலவிமாம்பழம் முழுவதையும் தாமே பயன்படுத்தியவரும் இருந்தார்கள்.

வில்வராய முதலியாரின் இல்லம் எவ்விடத்ததோ, என்ற முறையில் மாட்டுக் காரப் பிள்ளைகளைக் கேட்ட வித்துவானின் முகத்தில் அறைந்தாற்போலப் பாலன் ஒருவன் விரல் சாட்டிப் பாட்டிலே விடை கூறினுன்.

பொன்பூச் சொரியும் பொலிந்த செழுந்தாதி
றைக்கும்
நன் பூதலத்தோர்க்கு நன்
னிழலாம் மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்ல
வராயன்றன்
வாசலிடைக் கொன்றை
மரம்''

பாட்டாலே விடையிறுத்து வழிகாட்டிய சிறுவனின் சாமர்த்தியத்தால், சாங்கோபாங்க வழிகாட்டுதலால், முதலியாரின் வீட்டையடைந்த வித்துவானுக்கு உள் வியர்வை ஒருபுறம் பாலனின் பாட்டில் கொன்றை பொன் பூச்சொரியும் என்பது. முன்னர் நந்திக் கலம்பகத்தில் ''கொங்கைகளும் கொன்றைகளும் பொன் சொரியும்,' எனப் படித்த நினைவு இருந்திருக்கலாம். இந்த நயமான தொடரை இந்தப் பாலன் எவ்வாறு கையாண்டான். (தலைவனைப் பிரிந்திருந்த கற்புடைய தலைவியின் முலையில் உண்டாகும் ஒரு வகைத் தேமல் பொன் போலிருக்குமாம்)

பாட்டைக் கேட்ட முதலியாருக்கு ஒரே மகிழ்ச்சி. தம்மூர் மாட்டுக்காரச் சிறுவன் தம்மையும் வீட்டையும் கொன்றை மரத்தையும் நல்லூரையும் அழகாகப் பாடிவிட்டானே! அவன் யார் பிள்ளையாய் இருப்பானே? இறைவா!''

தமிழ் தந்த தாதாக்கள்

வெளிநாடு செல்வதற்கு
விமான டிக்கட்
அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்
(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)
இன்றே நாடுங்கள்
மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.
8, வருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

**கே. எஸ். பாலச்சந்திரன்**

**எழுதும்**

# ஒலிம்பிக் போட்டிகள்

நவீன ஒலிம்பிக் போட்டிகள் எவ்வாறு அமைய வேண்டும் என பின்வருமாறு பாரொன் பீரிடி கூபட்டின் கருத்துத் தெரிவித்தார்,

'.ஆதிகாலத்தில் இருந்ததைப்போல, விளையாட்டுக்களில் பெருந்தன்மையும் சகிப்புத்தன்மையுள்ள வீரமும் முக்கிய குணங்களாக பாதுகாக்கப்பட' போற்றப்பட முயற்சிகள் எடுத்தல் வேண்டும் எவ்வாறு ஆதிகால கிரேக்க நாட்டில், இப்போட்டிகள் சிறந்த உதாரண குணங்களை போதிக்கக் காரணமாய் அமைந்தனவோ, அதே கல்வியை தற்கால மக்களுக்கும் இது போதிக்க வேண்டும் தறகால நிலைமைகளுக்கொரு முறை உலகின் பல பாகங்களிலிருந்தும் விளையாட்டு வீரர்கள் ஒன்று சேர்க்கப்பட்டு சர்வதேச நல்லுறவின் அடிப்படையில், சிநேகபூர்வமான' ஆனல் வீரத்திற்குரிய தன்மையில் போட்டிகள் நடாத்தப்பட சர்வதேச ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்',

அமெரிக்கா' பெல்ஜியம்' பொலீவியா, இங்கிலாந்து, பிரான்ஸ், கிறீஸ், இத்தாலி, ரஷ்யா, ஸ்பெயின், சுவீடன் ஆகிய 10 நாடுகளின் பிரதிநிதிகள் கூடி இவரது ஆலோசனையை மிகுந்த ஆதரவுடன் ஏற்றுக் கொண்டார்கள். அவுஸ்திரேலியா, ஒல்லாந்து. ஹங்கேரி போன்ற நாடுகளிலிருந்து பாராட்டுச் செய்திகளும் வந்து சேர்ந்தன.

ஒலிம்பிக் போட்டிகள், புதிய வடிவத்துடன் உயிர்ப்பிக்கப்படவேண்டும் என்ற விடயம் தீர்மானிக்கப்பட்டு விட்டது. ஆனல் எங்கு? எப்போது? முதலாவது ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவது என்ற முடிவிற்கு வருவது தான் பிரச்னையாகவிருந்தது.

இறுதியில் ஆதிகால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற கிரேக்க தேசத்தின் அதே ஒலிம்பியாக் கிராமத்திலேயே நவீன ஒலிம்பிக் வரிசையில் முதலாவது போட்டிகளை 1896ல் நடத்த வேண்டுமெனத் தீர்மானித்தார்கள்.

**நவீன ஒலிம்பிக**

நவீன ஒலிம்பிக் போட்டிகளில் கண்கொள்ளாக் காட்சியமைத் தருவது, அதன் ஆரம்பமும் முடிவுமேதான். பிரதான விளையாட்டரங்கில் முதல் நாளும் கடைசி நாளும் கலந்து கொள்ளும் அதிர்ஷ்டம் படைத்தவர்கள் வாழ்நாளில், என்றுமே மறக்கமுடியாத அந்த அற்புதக் காட்சியைக் காணும் பாக்கியத்தைப் பெறுவார்கள்.

ஒலிம்பிக் போட்டிகள் எப்போதும், அது நடைபெறும் நாட்டின் மன்னரால் அல்லது ஜனதிபதியால் அல்லது அரசாங்கத்தின் வேறு தலைவரால் ஆரம்பித்து வைக்கப்படும். வாத்தியங்கள் அந்நாட்டுத் தேசிய கீதத்தை ஒலிக்க அவரை கௌரவ பீடத்திற்கு வைபவ ஏற்பாட்டாளர்கள் அழைத்துச் செல்வாகள்.

அதன் பிறகுதான் ஆரம்ப விழாவின் உச்சக் கட்டமான அணி வகுப்பு நடைபெறும். வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்களும், வீராங்கனைகளும் வெவ்வேறு வர்ணங்களில் தேசிய உடைகளை அணிந்து தங்கள் நாட்டின் பெயர் குறித்த அறிவிப்புப் பலகை முன்னே செல்ல' கம்பீரமாக அணிவகுத்துச் செல்லும் அழகைப் பார்த்துத்தான் ரசிக்க முடியும். வர்ணனைகளுக்கு இது அப்பாற்பட்டது.

இவ் அணிவகுப்பில் ஒலிம்பிக்கின் பிறப்பிடமான கிரேக்க நாட்டு வீரர் குழு முன்னணியில் செல்வதும், தொடர்ந்து மற்ற நாடுகள் பெயர் வரிசையில் செல்ல, ஈற்றில் அம்முறை போட்டிகளை நடாத்தும் நாட்டின் வீரர்குழு செல்வது வழக்கம். பீடத்தைத் தாண்டிச் செல்லும்போது கொடியைத் தாழ்த்தி அதில் நிற்கும் பிரமுகர்களுக்குமரியாதை செலுத்துவார்கள். அதன் பின்பு அரசர் அல்லது ஜனதிபதி சிறிய உரை நிகழ்த்தி ஒலிம்பிக் போட்டிகளை ஆரம்பித்து வைப்பதாக அறிவிப்பார். தொடர்ந்து பீரங்கிகள் முழங்க, வாத்தியங்கள் ஒலிக்க, வெண்நிற ஒலிம்பிக் கொடி பிரதான ஸ்தம்பத்தில் ஏற்றப்படும்.

**ஒலிம்பிக்**

**தீபம்**

ஒலிம்பிக் கொடி ஏற்றப்பட்ட பின் ஒலிம்பிக் பந்தத்தைக் கையில்தாங்கிக்கொண்டு அந்நாட்டு வீரர் ஒருவர் மைதானத்தினுள் நுழைவார். மக்களின் ஆரவாரத்தினிடையேஅவர் மைதானத்தை வலம் வந்து, பின்னர் அங்கு உயரத்தில் இருக்கும் பெரிய தீபத்தினை அப்பந்தத்தினல் எரியச் செய்வார். போட்டிகள் முடிவடையும் வரைக்கும் இத்தீபம் எரிந்துகொண்டேயிருக்கும்.

நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பித்த காலத்திலிருந்து 1936 வரை ஒலிம்பிக் தீபம் என்பது ஆண்டாண்டு காலமாக ஒலிம்பிக் இலச்சியத்தை குறிக்கும் ஒருசொல்லாக மட்டும்விளங்கியது. ஆனல் 1936ல் ஜெர்மனியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் போதுதான் ஒலிம்பிக் தீபம்கொண்டு செல்லப்படும் முறை ஆரம்பிக்கப்பட்டது விளையாட்டுகள் ஆரம்பமாகும்முன்னர் பல்லாயிரக் கணக்கான புருக்கள் விண்ணிலே பறக்கவிடப்படுகின்றன அவை படபடவென சிறகடித்துப் பறக்கும்காட்சி அற்புதமாயிருக்கும்.

**சத்தியப்பிரமாணம்**

அதைத்தொடர்ந்து வீரர்களின்சத்தியப்பிரமாண வைபவம் நிகழ்கிறது அந்தநாட்டுவீரர்களில் ஒருவன் கையில்தனது நாட்டுக்கொடியைத் தாங்கிய வண்ணம் பீடத்திற்கு கிட்ட வந்து நின்று, உரத்த குரலில் பின்வருமாறு சத்தியம் செய்வான் மற்றவீரர்களும் தங்கள் வலதுகைகளைத் தூக்கி, அவ்வசனங்களைத் திருப்பிச் சொல்லுவார்கள்.

இதுவே ஒலிம்பிக் சத்தியப் பிரமாணம்: ''நாங்கள் ஒலிம்பிக்போட்டிகளில் விதிக்கப்பட்ட நியதிகளுக்கு கட்டுப்பட்டு பணிவாக போட்டிகளில் பங்குபற்றுவோமெனவும், எங்கள் நாட்டின்கௌரவத்துக்காகவும், விளையாட்டின் மேன்மைக்காகவும், உண்மையான விளையாட்டு வீரனின் மனப்பாங்குடன் போட்டிகளில் பங்குபற்ற விரும்பமுடையோம் என்பதையும் இத்தால் சத்தியம் செய்துஉறுதிப்படுத்துகிறேம் சத்தியப்பிரமாணம் முடிந்தபின்னர் விளையாட்டு வீரர்கள் திரும்பவும் அணிவகுத்து அரங்கைவிட்டு வெளியேறுவார்கள்; அதன்பின்னர் தான் மைதானத்தில் போட்டிகள் ஆரம்பமாகின்றன.

உடற்பயிற்சி, குத்துச் சண்டை, நீச்சல், வாட் சண்டை, உதைபந்தாட்டம், படகோட்டப் போட்டி போன்றன சுமார் 20 விளையாட்டுக்களில் போட்டிகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு வகை விளையாட்டிலும் பல்வேறுதரப்பட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

நவீன ஒலிம்பிக் போட்டிகளில் விளையாட்டை எவ்வகையிலும் தொழிலாகக் கொள்ளாதவர்களே-பொழுது போக்காகக் கொண்டவர்களே பங்குபெற அனுமதிக்கப் படுகிறார்கள் வயதுச்சுதந்திரம் தாராளமாகஉண்டு. எவ்வயதினரும் எப்போட்டிகளிலும் பங்குபெற்றலாம். ஒரு நாட்டின் பிரஜையே, அந்தநாட்டின் சார்பில் போட்டிகளில் பங்குபற்ற முடியும். ஒருவிளையாட்டு நிகழ்ச்சியில் ஒரேநாட்டுவீரர்களில் மூவருக்குமேல் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆனல் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் எவரும் சமயம், நிறம், அரசியல் முதலிய காரணங்களுக்காக ஒதுக்கப்படவோ, தடுக்கப்படவோ, மாட்டார்கள்.

**பெண்கள் அனுமதி**

ஆதிகாலப் போட்டிகளில் பெண்கள் பார்வையாளராகக் கூடஇருக்க அனுமதிக்கப்படவில்லை; ஆனல்நவீன ஒலிம்பிக் போட்டிகளில் கூட 1908ல் லண்டனில் நடந்த 4வதுஒலிம்பிக் போட்டிகளில் தான் பெண்கள் முதன்முறையாகப் பங்குபற்ற அனுமதிக்கப் பட்டார்கள்.

நவீன ஒலிம்பிக் போட்டிகளில் முதலிடம் பெற்றவருக்கு தங்கப்பதக்கமும், இரண்டாவதாக வருபவருக்கு வெள்ளிப் பதக்கமும், மூன்றும் இடத்தைப் பெறுபவருக்கு வெண்கலப்பதக்கமும், வழங்கப்படுகின்றன. வெற்றிபெறுபவர்கள் பதக்கங்களுடன் சான்றுப் பத்திரங்களும் பெறுகிறார்கள்.

'ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றிகொண்ட நாடு' என்று ஒருபோதும் குறிப்பிடுவதில்லை ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் ஆறுஇடங்களைப் பெறுபவர்களின் பெயர்களைக் கொண்ட கௌரவப்பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு அது சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் பொறுப்பில் இருக்கும். அதுவே அங்கீகாரம் பெற்ற அறிக்கையாக வெளிவரும்

**ஐந்து வளையங்களைக் கொண்ட**

**ஒலிம்பிக் சின்னம், ஐந்து**

**கண்டங்களினதும் ஒற்றுமையை**

**வலியுறுத்துகின்றது!**

**ஒலிம்பிக்**

**வளையங்கள்**

போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்படும் அதேநேரத்தில், வெற்றிபெற்ற வீரர்களின் நாட்டுத் தேசியக்கொடி. விளையாட்டு அரங்கில் அறிவிப்புப்பலகையின் மேலுள்ள கம்பத்தில் ஏற்றப்பட்டு, அவர்களின் தேசிய கீதத்தின் ஒரு பகுதியும் ஒலிபரப்பப்படும்.

ஒலிம்பிக்போட்டிகள் நடைபெறும் மைதானத்தில் நடுநாயகமாக தூய வெண்ணிறக் கொடி ஒன்று பறக்கும். அது தான் ஒலிம்பிக்கொடி. இவ்வொலிம்பிக்கொடி 1920ம் ஆண்டில் பெல்ஜியத்தில், அன்வெப்நகரில் நடந்த ஒலிம்பிக்போட்டிகளின் போதுதான் முதன்முதலில் ஏற்றப்பட்டது. அதில் பொறிககப்பட்டிருப்பதுதான் பிரபலமான ஒலிம்பிக் சின்னம். அந்தச்சின்னம் நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு, ஆகியஐந்து நிறவளையங்களை ஒன்றோடொன்று, இணைத்துக்காணப்படுகின்றன.

இவ்வாறு இணைந்திருக்கும் இவ்வைந்து வளையங்களும் உலகின் ஐந்து கண்டங்களின் ஒற்றுமையைக் குறிப்பதாக அமைந்துள்ளன. அவைக்குக் கீழே லத்தீன் மொழியில் 'மிக வேகமாக' 'மிகஉயரமாக' 'மிகுந்த பலத்துடன்' என்ற கருத்துக்களைக் கொண்ட மூன்று வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளன.

இதுவே ஒலிம்பிக்வீரர்களின், வீராங்கனைகளின் தாரக மந்திரம். ''இன்னும் வேகமாக ஓடுங்கள்'' ''இன்னும் உயரமாகப் பாயுங்கள்'' ''இன்னும் அதிகபலத்துடன் எறியுங்கள்'' என்று அவர்களை ஊக்குவிக்கும் ஒலிம்பிக் ஆரவாரத்தின் அடிநாதமாக இவை உள்ளன.

**1908ம் ஆண்டு லண்டன்**

**ஒலிம்பிக் போட்டிகளிலேயே**

**முதல் தடவையாக பெண்கள்**

**பங்குகொள்ள அனுமதி!**

## ✯ ஒலிம்பிக் சத்தியப்பிரமாணம்

''ஒலிம்பிக் போட்டிகளில் விதிக்கப்பட்ட நியதிகளுக்குக் கட்டுப்பட்டு, பணிவாகப் போட்டிகளில் பங்குபற்றுவோமெனவும், எங்கள் நாடுகளின் கௌரவத்துக்காகவும், விளையாட்டின் மேன்மைக்காகவும் உண்மையான விளையாட்டு வீரனின் மனப்பாங்குடன் போட்டிகளில் பங்குபற்ற விருப்பமுடையோம் என்பதை இத்தால் சத்தியம் செய்து உறுதிப்படுத்துகிறேம்.''

# விளையாட்டு

**அனந்த் - சூரி**

**ஒலிம்பிக்நிறைவு**

**வைபவம்**

ஒலிம்பிக்கடைசி போட்டிகள் முடிந்ததின் பின்னர் ஆரம்பவிழாவில் இடம்பெற்ற அதேநிகழ்ச்சிகள், ஆனல் மகிழ்ச்சிப் பிரவாகத்திற்குப் பதிலாக, சோகஉணர்ச்சி இழையோட நிகழ்கின்றன. முடிவுவிழாவிலே ஒவ்வொரு நாட்டின் சார்பிலும் 6 வீரர்கள் கலந்து கொள்வார்கள். மைதானத்துக்குள் அணிவகுத்து வரும் வீரர்கள், வீராங்கனைகள், தனித்தனி நாடுகளாக வரிசையாக நிற்காமல், இறுதி நாளன்று கலந்து நின்று ஒலிம்பிக்சகோதரத்துவத்தை உறுதிப்படுத்துவார்கள்.

வாத்திய ஒலிகளும், கூட்டுப் பாடல்களும் ஒன்றிணைந்து ஒலிக்க ஒலிம்பிக்கொடி மிக மெதுவாக கம்பத்திலிருந்து இறக்கப்படும் இதேகணம் ஒலிம்பிக்தீபத்தையும் சிறிது சிறிதாக அணைப்பார்கள்.

பிரதான அரங்கின் படிக்கட்டுகளில் இருந்து இந்நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களும், தங்கள் கைகளை ஆட்டி பிரியாவிடை கொடுத்தாலும், அவர்கள் இதயங்களில் மீண்டும் எப்போது இப்பெருவிழாவை காணப் போகிறேம், எப்போது எங்கள் நாட்டில் திரும்பவும் இப்பெருவிழா நடக்கப் போகின்றது, என்ற ஏக்கம் எழத்தான் செய்யும். நவீன ஒலிம்பிக்போட்டிகள் எப்படி அமைகின்றன என்பதைப் பார்த்த நாம், அடுத்தவாரம் அதன் ஆரம்பவரலாற்றுச் சம்பவங்களையும் பார்ப்போம்.

(தொடரும்)

**சிறந்த**

**நூலைப்படிக்குமுன்...**

சிறந்த ஒரு நூலைப் படிப்பதற்கு முன் இப்படி நன்றி சொல்லித் துவங்க வேண்டும் என்கிறார் நார்மன் வின்செண்ட் பீல்.

ஆண்டவனே, படிப்பதற்காக நாங்கள் தேர்ந்தெடுக்கும் இந்தப் புத்தகத்தின் தாள்களைப் புரட்டும் போது' இது காறும் மனிதனின் அறிவு உலகுக்கு வழங்கி வந்துள்ள உயர்ந்த சிந்தனைகள் அனைத்துக்காகவும் நன்றி செலுத்துகிறேம்.

விரிந்த உள்ளம் படைத்த பேரறிஞர்களுடன் தோழமை பூணும் வாய்ப்பைத் தந்துள்ள நல்ல நூல்களுக்காக நன்றி செலுத்துகிறேம்.

ஒரு நண்பனை மதித்துப் போற்றுவதுபோல் நாங்கள் இந்தப்புத்தகத்தை நடத்துவோமாக.

எங்கள் எண்ணங்களை உயர்த்தக்கூடிய, உள்ளத்தைச் செம்மைப்படுத்தக் கூடிய, மனத்துக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய நூல்களையே நாங்கள் படிப்போமாக

—சின்னி

# இவ்வாரம் எப்படி?

திருமலை வே. ரவீந்திரன்

### மேஷம்

குடும்பத்தில் சிறுபூசல்கள் தோன்றி மறையும். உடல் நிலையும் சிறிது பாதிக்கப்படக் கூடும். சிநேகிதர்மூலம் தொல்லைகள் அதிகரிக்கும். வாழ்க்கையில் சோர்வுக்கிடமுண்டு. சிறிய விஷயத்திற்கும் இடமுண்டாம்.

### ரிஷபம்

நிதியில் அபிவிருத்தி தென்படும். எதிர்பாராத வரவுகளுக்கு இடமுண்டு. தொழிலில் வெற்றி கிடைக்கும். பேச்சின்மூலம் எதையும்சாதிப்பீர்கள். குடும்பவாழ்வில் சிறந்த வாரம்.

### மிதுனம்

அந்நியர்களுடன் பழகுவதில் அதிக கவனம் செலுத்தவும். சகோதரர்மூலம் பிரச்னை உருவாகலாம். எதிலும் அவதானம் வேண்டும். வாகனச் சாரதிகள் நிதான புத்தியுடன் நடந்து கொள்ளவும்.

### கடகம்

ஆராய்ச்சியாளர்களுக்குப் பொன்னான தினம். இனசன மகிழ்ச்சியும் உண்டு. வாகன விருத்தியும் உண்டு. தாய் வழி ஆதரவுக்கும் இடமுண்டு. புதிய முயற்சிகள் இன்று கைகூடும்.

### சிம்மம்

வாழ்க்கையில் புதிய நம்பிக்கை உதயமாகும் நீண்ட நாள் கோரிக்கை இன்று நிறைவேற்றப்படலாம். புத்திரசுகமும் உண்டு. பொதுவாக வாழ்க்கையில் நிம்மதி கிடைக்கும். தொழிலிலும் வெற்றி கிடைக்கும்.

### கன்னி

நம்பிக்கை மோசடி நடக்கக் கூடும். தற்காலிகப் பிரிவு எதிர்பாராமல் ஏற்படலாம் முக்கியமான காரியங்களைப் பின்போடவும். உஷாராக இருக்கவும். தெய்வ நம்பிக்கை விரும்பத்தக்கது.

### துலாம்

பறந்துவரும் கடிதம் ஒன்று உங்களைப் பரவசப்படுத்தும். தொழில் துறையிலும் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும். சிலருக்குப் பொதுசனத் தலையீடுகளிலும் இடமுண்டு.

### விருச்சிகம்

பணவிஷயத்தில் சிக்கனம் அவசியம். தொழில் புரியும் இடத்தில் குறை கேட்க நேரிடும். பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும். விபத்துக்கும் இடமுண்டு. அவதானம்வேண்டும்.

### தனுசு

சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு. உங்கள் நடவடிக்கைகளில் தனிச்சிறப்புக் காணப்படும். பெரியோர் ஆதரவும் கிடைக்கும். நீண்டநாள் கனவு இன்று நனவாகும்

### மகரம்

வாழ்க்கையில் மகிழ்ச்சியுண்டு. எதிர்பார்த்த சுபகாரியம் ஒன்றுக்கு இன்று வழி கோலப்படும். இடமாற்றமும் ஏற்படக்கூடும். நீண்டநாள் பிணக்கு இன்று நிவர்த்தியாகும். முன்னேற்றமான நாள்.


### கும்பம்

மாணவர்கள் மத்தியில் முன்னேற்றம் காணப்படும். பெரியோர் மத்தியில் பெருமையும் உண்டு. தொழில் விருத்திக்கும் இடமுண்டு. சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும். கைத்தொழில் விருத்திக்கிடமுண்டு.

### மீனம்

தொழில் துறையில் அவதூறுகள் ஏற்படும். தானிய நஷ்டத்திற்கும் இடமுண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். பொறுமை நன்று. சில சிக்கல்கள் மத்தியில் மாட்டிக் கொள்ள நேரிடும். நடுநிலைமை நன்று.


## நவீன உல்லாசக் குடிசைகள்



### எல்லாம் உங்களுக்காகவே

- பிரதி சனி, ஞாயிறு நாட்களில் மதிய போசனம் Buffet Lunch-ரூபா 50/- மட்டுமே
- எமது விசேஷமான ஐஸ் கிறீம்வகைகள் :

| | | |
|---|---|---|
| வனிலா | ½ கலன் | ரூபா 60/- |
| ஸ்ரோபரி | ½ கலன் | ரூபா 60/- |
| சொக்லேட் | ½ கலன் | ரூபா 70/- |

குளிருடன் கொண்டுசெல்லக்கூடிய (Rigifoam) பெட்டிகள் Rs. 50/- டிபொசிட்

- உல்லாச வார விடுமுறை தினங்கள் (Weekend Package) வெள்ளி இரவு முதல் ஞாயிறு மதியம் வரை

(அனைத்து உணவுடனும், தங்குமிட வசதிகள் உட்பட)

குளிரூட்டிய அறைகள் - இருவருக்கு ரூபா 590/-

குளிரூட்டிஅற்ற அறைகள் - இருவருக்கு ரூபா 500/-

பிற்குறிப்பு: மேற்கூறிய கட்டணங்களுடன் 10% சேவிஸ் சார்ஜ்

- கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியான விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.
- புதுமண தம்பதிகளுக்கு விசேஷ சலுகைகள்

**Harbour View Hotel**
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
**AITKEN SPENCE & CO LTD**
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone : 22802 Jaffna

எமது புதிய தொலைபேசி இலக்கம்: 22802

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா கடலோர உல்லாச பயணிகள் ஹோட்டல்

**காங்கேசன்துறை**

**ஹாபர் வியூ ஹோட்டல்**

THE ONLY SEASIDE GARDEN RESORT HOTEL IN THE NORTH


# இரு துருவங்களான ஜி. ஜி.யும் செல்வாவும்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் தேதி நடந்த பொதுத்தேர்தல் முடிந்த மறுநாள் நடந்த சம்பவம் ஒன்று.

தேர்தல் முடிவுகள் வெளிவந்துவிட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிரழசுக் கட்சிக்குப் பெரும்பான்மை ஸ்தானங்கள் கிடைத்தன. இத்தேர்தலில் திரு டட்லி சேனநாயகா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி 157 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஸ்தானங்களைப் பெற்றிருந்தது.

## செல்வாவுடன் பேட்டி

இந்நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலை என்ன என்பதை அறிந்து கொள்வதற்காகத் தமிரசுக் கட்சியின் தலைவர் திரு.எஸ்.ஜே.வி செல்வநாயகத்தைப் பேட்டி காண்பதற்காகத் தெல்லிப்பழையிலுள்ள அவருடைய இல்லத்துக்குச் சென்றிருந்தேன். அவரைப் பேட்டி காண்பதென்பது அவசர அவசரமாகச் செய்து முடிக்கும் காரியமல்ல.

மற்றவர்களைப் பேட்டி காணும் பொழுது குறிப்பெடுத்துக் கொண்டு அலுவலகம் வந்து எழுதிக் கொடுக்கலாம். ஆனால் திரு. எஸ் ஜே வி.யிடம் அப்படிச் செய்ய முடியாது. அவர் சொல்லும் பதில்களை விளக்கமாக எழுத வேண்டும். திருப்பி வாசித்துக் காட்டவேண்டும். ஒன்றுக்கு இரண்டு மூன்று தடவையும் வாசிக்கச் சொல்லுவார். திருத்தமும் செய்வார். கேள்வி கேட்டதும் உடனே பதில்வராது. கேள்வியை மீண்டும் திருப்பிக்கேட்டால் ''எனக்கு விளங்குது'' என்று சொல்லி விடுவார். பதில் ஒரு நிமிஷத்திலும் வரும்; பத்து நிமிஷத்திலும் வரும்!

பொட்டர் திரு. நடராசாவும் அருகிலிருக்கும் தெல்லிப்பழை இல்லத்தில் திரு எஸ். ஜே வி. பேட்டிதந்து கொண்டிருக்க அவரதுபுதல்வர் வந்து விமான நிலையத்துக்குப் போக நேரமாகிவிட்டதென அறிவித்ததும் விமான நிலையத்தில் பேட்டியைத் தொடரலாம் எனக்கூறிப் புறப்பட்டார்.

பலாலிவிமான நிலையத்தில் தொடர்ந்தபேட்டி முடிந்ததும் நான் முன்னேஎழுந்து திரு ஜி ஜி. நின்றஇடத்துக்கு வந்தேன். விமான நிலையசிற்றுண்டிச்சாலை வாயிலுக்கு முன்பாக உடுவில் வி தர்மலிங்கமும் கோப்பாய் சி. கதிரவேலுப்பிள்ளையும் ஜி. ஜி. யுடன் பேசிக்கொண்டிருந்தபோது இடையில் ஒரு காங்கிரஸ்காரர் ஏதோசொல்ல, ''இவர்கள் பொடியள்'' என்று இருஎம். பி.க்களையும் சுட்டவும் மூவரும் சிரித்தனர்.

இதேசமயம் திரு எஸ்.ஜே வி. யும் எழுந்து ஓடுபாதையில் வந்துகொண்டிருக்கும் விமானத்தை எதிர்பார்த்து மெதுவாயக நடந்து வந்து கொண்டிருந்தார்.

## புகைப்பட முயற்சி

விமானநிலைய சிற்றுண்டிச் சாலை வாசலுக்குச் சமீபமாக ஜி. ஜி. நிற்க எஸ். ஜே. வி. பின்னால் மெதுவாகநடந்து வந்து கொண்டிருந்ததைத் கண்ட நண்பர் வீரகேசரி செல்லத்துரை தமதுபுகைப் படப்பிடிப்பாளரைத்தயாராக்கிக் கொண்டு ஜி. ஜி யிடம் வந்து 'நீங்கள் இப்படியே நில்லுங்கள் என்று சொல்ல, அவரும் அதற்கிசைந்தார். எஸ். ஜே. வி. யிடமும் இப்படியே வாருங்கோ ஐயா,, என்று நிருபரும் புகைப்படப்பிடிப்பாளரும் வழிகாட்ட அங்குநின்ற கட்சித் தொண்டர்களுக்கு அதுபிடிக்காமல் போகவே நீங்கள்படம் எடுப்பதன்றால் எடுங்கோ அப்பிடி இப்பிடி செட்பண்ணவேண்டாமென்று கூற இருகட்சித் தொண்டர்களும் சேர்ந்து சிலவருடங்களுக்குமுன்னர் பிரிந்த இரு தலைவர்களையும் ஒன்றாகச் சேர்த்து ஒருபுகைப்படம் எடுக்கும் வாய்ப்பை இல்லாமல் செய்துவிட்டனர்!

அன்று கொழும்புதிரும்பிய திரு எஸ். ஜே. வி யின்பேட்டி 'ஈழநாடு' பத்திரிகையின் முதல்பதிப்பில் ''எந்தக்கட்சியுடனும் சேரமாட்டோம்'' என்று வெளிவந்திருந்தது. நகரப்பதிப்பில் டட்லியின் தேசியஅரசில் தமிழரசும் சேர்ந்தது என்று செய்தி வெளியாகியிருந்தது.

1965-ஆம் ஆண்டு ஜி.ஜியும் எஸ்.ஜே வி. யும் ஒன்றாகப் புகைப்படம் எடுக்காதது அவர்கள்மேலும் சிலகாலம் வாழவேண்டுமென்பதற்காகத்தானோ!

1976 ஆம் ஆண்டு ட்ரயல் அற்பார் வழக்கில் எஸ் ஜே. வி. தலைமையில் ஜி. ஜி. யும் மு. திருச்செல்வமும் ஆஜராக வந்தபோது மூவரையும் ஒன்றாகவைத்து எடுத்தபுகைப்படம் பத்திரிகைகளில் மட்டுமல்ல கலண்டர்களிலும் வெளிவந்தன. கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும் தமிழருக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது அந்தக்காட்சி.

விரைவில் மூவரும் ஒருவர் பின்ஒருவராக மறைந்து போவார்களெனயார் எதிர்பார்த்தார்கள்!




லண்டன்மடல்: "உதயதாரகை"

"தேம்ஸ் நதிக் கரையி
லிருந்து
தேடிவரும் ஓசை
தேன் தமிழில் செய்தி பல
பாடி வரும் ஓசை
ஆங்கிலத் தாய் நாட்டி
னின்றும்
அன்னை தமிழ் முழங்கிடவே
ஓங்கு புகழ் பி.பி.சி
ஒலி செய்யும் நாளினிலே
எம்மதமும் சம்மதமாய்
எல்லோரும் உறவினராய்
அம்மம்மா தமிழோசை
அறிவொளியைப் பரப்பு
தம்மா!.'

பிரிட்டிஸ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (பி.பி.சி) கடல் கடந்த நாட்டுச் சேவையின் திலகமெனத் திகழும் 'தமிழோசை' நிகழ்ச்சி பற்றிய கவிதைகள் இவை என்பது சொல்லாமலே விளங்கும். ஆனால்— இந்த அழகிய அடிகளை வடித்துத் தந்தவர் யார் தெரியுமா?

அவர்தான்— பி.பி.சி. தமிழ்ச் சேவையின் அதிபராசத் துலங்கிவரும் திரு. சங்கரமூர்த்தி.

'ஈழநாடு' சார்பில் திரு.சங்கரமூர்த்தியைச் சந்தித்தேன். 'ஈழநாடு' என்ற பெயர் அவர் முகத்தில் ஏற்படுத்திய மலர்ச்சியை அவதானித்தேன்.

''தமிழோசை நிகழ்ச்சிக்கு நல்ல ஆதரவு தரும் பத்திரிகை ஆயிற்றே ஈழநாடு. எங்கள் நிகழச்சிகள் பற்றிய விபரங்களை அனுப்பி வைத்தால் அதற்கு நல்ல முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிப்பார்கள்'' என்று மன நிறைவுடன் பேசினார் திரு. சங்கரமூர்த்தி.

இரு தசாப்தங்களுக்கு மேலாக தேம்ஸ் நதிதீரத்திலிருந்து தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்து வருகிறார் திரு. சங்கரமூர்த்தி.

பழகுவதற்கு இனியவர். தமிழ் நாட்டைத் தாயகமாகக் கொண்ட இவர். பேசும் தமிழ் சுவையாக, அழகாக, இனிமையாக இருக்கிறது. தமிழ் இவர் நாவில் தவழ்ந்து வருமபோது, அதன் இயல்பான சொற்சுவை மேலும் மெருகடைந்து வருவது போன்ற பிரமை ஏற்படுகிறது.

இவரை ஒரு ஒலிபரப்பாளர் என்று அழைப்பதா, அல்லது தமிழறிஞர் என்று சொல்வதா, அல்லது கவிஞர் என்று கூறுவதா, அல்லது நாடகாசிரியர் —நடிகர் —திரைப்பட வசன கர்த்தா என்று தீர்மானிப்பதா என்று எவரையும் திணறடிக்கும் வகையில் ஒரு சகலகலாவல்லவனாகத் திகழ்கிறார்.

அதனால்தானோ என்னவோ நமது நாட்டைச் சேர்ந்த 'பல்கலை வேந்தன்' சில்லையூர் செல்வராசன் மீது நிறைந்த அபிமானம் வைத்திருக்கிறார். சில்லையூராரின் கவிதை நயத்தைப் பற்றி மிகவும் பாராட்டிப் பேசினார்

ஷேக்ஸ்பியரின் புகழ் பூத்த நாடகங்களுக்கு தமிழ வடிவம் தந்து, தானும் நடித்து நெறிப்படுத்தி, ஒலிபரப்பி, பி.பி.சி. மேலதிகாகரிகளை மலைக்கச் செய்தது தமிழோசையில் திரு சங்கர் ஆற்றிய சாதனைகளில் ஒன்று. சங்கரின் ஷேகஸ்பியர் நாடகத் தொகுப்பு இப்போது அச்சில் உள்ளது. அடுதத மூன்றுமாதங்களுக்குள் இந்த நூல் வெளிவரும்.

அதன்சில பகுதிகளை வாசிக்கும் அரியவாய்ப்பு எனக்குக் கிட்டியது பலஇடங்களில், அசலை நகல்மிஞ்சிவிட்டதா என்று மலைப்புறும் வகையில், சங்கரின் தமிழ் வடிவம் அமைந்திருந்தது.

இலங்கைத் தமிழர்களின் இனியநண்பராக, ஆதரவாளராக, அனுதாபியாக விளங்குகிறார் திரு சங்கர். இவரது வலதுகரமாக இருந்து ''தமிழோசை', நிகழ்ச்சியை நடத்தி வருபவர் இலங்கை வானொலியிலிருந்து இலண்டன் வந்த திருமதி ஆனந்தி சூரியப்பிரகாஷ் அவர்கள். இலண்டனில் சட்டத்தரணியாகப் பணியாற்றும் முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் திரு விமல்சொக்கநாதனும் பகுதிநேரஒலிபரப்பாளராக ''தமிழோசை'' யில் பங்குபற்றுகிறார்.

பி.பி.சி தமிழ்ஒலிபரப்புகள் வாரத்தில் நான்குநாட்கள் இடம்பெறுகின்றன. செவ்வாய், விமாழன், சனி, ஞாயிறு நாட்களில் இலங்கை நேரம் இரவு 9.45 முதல் 10.45 வரை நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன.

**அலைவரிசைகள்**

சிற்றலைமீட்டர்கள் 25,41, 46.

மெகஹெர்ட்ஸ் 11 55, 7.18,6.165.

**பொதுநிகழ்ச்சிநிரல்**

செவ்வாய்- செய்தியரங்கம், தருணத்தையொட்டிய குறிப்புச் சித்திரம், நேயர்சருத்தரங்கம்.

வியாழன்- செய்தியரங்கம்' பல் சுவைக் கதம்பமாலை அல்லது அறிவியல் அரங்கம் நேயர் கருத்தரங்கம்.

சனி- செய்தியரங்கம்.

# தேம்ஸ் நதிக் கரையிலிருந்து

# தேடிவரும் 'தமிழோசை'

சிறப்புநாடகத் தொடர் அல்லது பேட்டி அல்லது சிறப்புச் சித்திரம், நேயர்கருத்தரங்கம். ஞாயிறு- 'வண்ணக்கதம்பம்—முன்ம் தமிழோசையில் ஒலிபரப்பான சிறப்பு நிகழ்ச்சிகளின் தொகுப்பு

செய்தியரங்கம் பகுதியில் உலகஅரங்கின் முக்கிய செய்திகள், செய்திஆய்வுரைக் கண்ணோட்டங்கள், தென் ஆசியவட்டாரச் செய்திகள், பிரிட்டிஷ் செய்தித்தாள் கருத்துரைகள் என்பன இடம்பெறுகின்றன. ஏப்பிரல்மாதத்தில் இலங்கையைப் பற்றிய செய்திகள் நிறைய ஒலிபரப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது'

கதம்பமாலைப் பகுதியில் பிரிட்டனில் நடக்கும் கலை—கலாச்சார விழாக்களைப்பற்றிய செய்திகளும், வெளியாகும் நூல்களைப் பற்றிய ''நூல் நிறை', மதிப்பீடுகளும் இடம் பெறுகின்றன. அவ்வட்போது மெல்லிசைப் பாடல்களும் இடம்பெறுகின்றன. இவ்வாண்டுமே மாதத்திலிருந்து ''மனைமங்களம்'' என்றமகளிருக்கான நிகழ்ச்சியும் அவ்வப்போது கதம்பமாலைப் பகுதியில் இடம்பெறவுள்ளது மகளிர்முன்னேற்றம், மனையியல் கல்விக் குறிப்புக்கள், பிரிட்டனில் கல்லூரிகளிற் பயிலும் மாணவியரின் பேட்டிகள், பிரிட்டன் வாழ் தாய்மார்களின் கருத்துக்கள்' கலைநிகழ்ச்சித் கீற்றுககள் போன்றவை இதில் ஒலிக்கவுள்ளன.

ஆகஸ்ட் மாதத்திலிருந்து' ஒவ்வொரு மாதத்தின் முதலாவது செவ்வாய்க் கிழமை தோறும் பட்டி மன்றம் விவாதமேடை நிகழ்ச்சி இடம் பெற இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பொருளை, இரு அறிஞர்கள் ஒட்டியும் வெட்டிடும் விவாதம் நடத்துவார்கள்.

பி.பி.சி. தமிழோசை நிகழ்ச்சிக்கு தமது கருத்துக்களை எழுத விரும்பும் இலங்கைத் தமிழ் நேயர்கள்—

B.B.C. Tamil Service
P O BOX 764
Colomdo

என்ற இலங்கை முகவரிக்கு எழுதலாம்.

நேரடியாக பி.பி.சி தமிழோசைக்கு எழுத விரும்பினால் வான் அஞ்சல் கடிதத்தில்—

B B.C. Tamil Service
P.O BOX 76
Bush House
London WC2 4PH
UNITED KINGDOM

என்ற இலண்டன் முகவரிக்கு எழுதலாம்.

## கிருஷ்ணவேணி

## நடன நிகழ்ச்சி

கலாக்ஷேத்ராவைச் (தமிழ் நாடு) சேர்ந்தபிரதம நடன ஆசிரியை கிருஷ்ணவேணி லக்ஷ்மணனின் பரதநாட்டிய நிகழ்ச்சி இம்மாதம் 6ம் திகதி லண்டன் பல்கலைக்கழக லோகன் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மண்டபம் ஜனவெள்ளத்தில் நிரம்பிவழிந்த இந்த நிகழ்ச்சியில் பங்குபற்ற ஸ்ரீ பகவதுலு சீதாராமசர்மா (பாட்டு- நட்டுவாங்கம்), ஸ்ரீ அனில்குமார் (மிருதங்கம் ஸ்ரீ உன்னிகிருஷ்ணன் (புல்லாங்குழல், ஸ்ரீலக்ஷ்மணன் (தம்புரா) ஆகியோர் தமிழ் நாட்டிலிருந்து கிருஷ்ணவேணியுடன் வந்திருந்தனர்.

இந்தநிகழ்ச்சியைத் தமிழ் பேசும் மக்களின் நிரந்தரக்குழு (''ஸ்கொட்'') ஒழுங்குசெய்து தனது செயலாற்றல் திறனை மீண்டு நிருபித்துள்ளது.

இந்தநிகழ்ச்சி வழியாகக் கிடைத்த நிதி அனைத்தும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்குப் பயன்படுத்தப்படும்.

கிருஷ்ணவேணி இருவருடங்களுக்கு முன்னர் இலங்கைக்குமவந்து நடன நிகழ்ச்சிகளை அளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உடற்பயிற்சி போன்ற மனப்பயிற்சியே தியானம்

ஒரு மனிதன்-ஒரு சமூகம், ஒரு நாடு; இன்று உலகில் இப்பிரிவுகள் அனைத்தும் குழம்பியிருக்கின்ற தன்மை காணப்படுகின்றது. திருப்தியின்மை, விரக்தி, சந்தேகம்' பிணி, பிணக்கு என்பன ஒவ்வொரு மனிதனையும் பாதித்துள்ளன சமூகங்கள் துவேசம், சருத்து வேற்றுமைகள் கலகங்களைக் கொண்டுள்ளன நாடுகள் சில வறுமையாலும் நோய் நொடிகளாலும் சீர்குலைந்துள்ளன வேறு சில போர் மனப்பான்மையுடன் ஆயுதப் பெருக்கம், படைபல அதிகரிப்பு, இராணுவ அச்சுறுத்தல்களில் இறங்கியுள்ளன

இத்தகைய நிலைமைகளுக்கெல்லாம் ஒரு நிதானமற்ற பக்குவமற்ற தன்மைகளே அடிப்படையாக இருப்பதை அறிய முடிகின்றது. ஒரு மனிதன் சிறந்த முறையில தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டால் அவனை அவன் சார்ந்த சமூகம் பின்பற்றும். இதனால் அச்சமூகம் சீர் பெறுகிறது. நாளடைவில் அது சார்ந்த நாடே இச் சீர் திருத்தத்தினால் திருந்தி விடுகிறது. இந்நிலையில் ஒரு பரந்த பரிபூரண பக்குவ நிலை ஏற்படுகிறது.

## மகரிஷி

## மகேஷ் யோகி

இப்பக்குவ நிலையை உலகம் முழுவதிலும் ஏற்படுத்துவதே அமெரிக்காவின் 'மகரிஷி சர்வதேச பல்கலைக் கழகத்தின்' நோக்கமாகும். இந்தியாவிலிருந்து அமெரிக்கா சென்றுள்ள மகரிஷி மகேஷ் யோகியே இப் பல்கலைக்கழகத்தினதும், இதன் மேற்கண்ட நோக்கத்தினதும் ஸ்தாபகர்.

'தியானம். Transcendental Meditation- T M) இதுவே மகரிஷி மஷேஷ் யோகி மனப் பக்குவத்தைப் பெறப் போதிக்கும் பெரும் பாடமாகும்.

தியானம் என்றதும் பலர் இது ஒரு சமய சம்பந்தமானது, அல்லது வழிபாட்டுடன் தொடர்புடையது என்றே கருதிவிடுகின்றனர். ஆனால் அப்படி எதுவும் இல்லை. உடலை உறுதியாக வைத்திருக்க எடுக்கும் தேகப் பயிற்சி போன்று மனதைத் தெளிவாக்கி பக்குவமுறச் செய்யும் ஒரு மனப் பயிற்சியே இத்தியானமாகும்.

1959ம் ஆண்டு மகரிஷி மகேஷ் யோகி அமெரிக்கா சென்றார். 60ம் ஆண்டில் தியானம் பற்றிய தமது பிரசாரத்தைத் தொடங்கினார். இன்று இதற்கென ஒரு பெரும் பல்கலைக் கழகத்தையும் (Maharishi International University) நடத்துகிறார். அமெரிக்காவின் சகல முக்கிய நகரங்களிலும் ஒவ்வொரு தியான நிலையங்களுள்ளன.

இது தவிர பெரும்பாலும் சகல நாடுகளிலும் இத்தியானப் போதனை நிறுவனங்கள் அமைந்துள்ளன. மகரிஷி சர்வதேச பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அந்தனி டிருஸ்ஸோ (Anthony Dirusso) டக்ளஸ் ரெக்ஸ்போர்ட் (Douglas Rexford) ரிச்சார்ட் பார்ன்ஸ் (Richard Barnes) ரொபேர்ட் வலெஸ் (Robert wallace) ஆகிய நால்வரும் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்னர். ''யாழ்ப் பாணம் போக வேண்டாம் அங்கு நிலைமை மோசம் பயங்கரம் என்று கொழும்பில் கூறினார்கள். ஆனால் நாம் அவற்றைப் பொருட்படுத்தாது வந்துள்ளோம்'' என்றார்கள் இவர்கள்.



பா. அனந்தகிருஷ்ணன்

## தீவிர தொண்டர்கள்

இவர்கள் மகரிஷியின் தியானப் போதனைகளைப் பரப்பி வரும் தீவிர தொண்டர்கள். இவர்கள் கூறுவது: தியானம் மனப்பக்குவத்துக்கான ஒரு சிறந்த பயிற்சி. இது எந்த வகையிலும் ஒரு மதச் சார்பானதல்ல.

''உடல் உழைப்பாளிகள் தம்மை உறுதியுடன் வைத்திருக்க உடற் பயிற்சிகளைச் செய்கின்றனர். ஆனால மனங் குளம்பியிருப்பவர்களில் பலர் தமது பிரச்னைகளைத் தீர்க்க இயலாது இருக்கின்றனர். இதனால் பலர் மதுவை நாடுகின்றனர். சிலர் உணர்ச்சிகளை அடக்க முடியாது வீண் தொல்லைகளில் மாட்டுப்படுகின்றனர் சமீப காலங்களிற் பலர் பெருமளவில் போதை வஸ்த்துக்களையும் நாடி வருகின்றனர் இவை அனைத்தும் மனதைப் பக்குவப்படுத்த இயலாமையால் ஏற்படும் விளைவுகளே.

## தியானத்தின்

## விளைவுகள்

எனவே இத்தகையவர்களை மனப்பக்குவம், நிதானம், அமைதியடையச் செய்வதே எமது தியானப் பயிற்சியாகும். இப் பயிற்சியால் நித்தம் பலவற்றைச் சிந்திக்கும் ஒரு தொழிலதிபர். நிதானத்துடன் செயல்ப்படுகின்றார், அவருக்கு தெளிவான புதிய யோசனைகள் கிடைக்கின்றன.

ஒருவிஞ்ஞானிக்கு அவனது அறிவு மேலும்விரிவுபெறுகின்றது. புதியஆக்கங்கள் அவனிடமிருந்து உருப்பெறுகின்றன. அத்துடன் அவனது சிந்தையும் தகுந்தஓய்வை அவ்வப்பொழுது பெறுகின்றது.

கணவன், மனைவியர்மோதல்களில் இறங்குவது குறைகிறது இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்கின்றனர். பிரச்னைகள் வராத வழிகளில் அவர்களது செயல்களும் திசைமாறுகின்றன.

மாணவப்பருவத்தில் உள்ளவர்கள் படிப்புவிடையத்தில் மனதை ஒன்றச் செய்கின்றனர். அவர்களின் சிந்தனை சக்திவிரிவுபெறுகிறது. ஞாபக சக்தி அதிகரிக்கின்றது இவற்றினால் அவர்களுக்கு சிறந்த பெறுபேறுகள் கிடைக்கின்றன. என்று விளக்கினார்கள்.

## வரைபடங்களில்

## அவதானிப்பு

தியானத்தைப் போதிப்பதில்மட்டும் இவர்கள் நின்றுவிடுவதில்லை. அதன் விளைவுகளையும் அவ்வப்போதுஅறிந்து கொள்கிறார்கள்: தாம்அறிந்தவற்றை அட்டவணைப்படுத்தித் தொகுத்து வைத்துள்ளனர். அவற்றில் சிலவற்றை எனக்குக் காண்பித்தனர்.

தியானப்பயிற்சி பெறும் ஒருவரின் மனத்தை ஆரம்ப நிலை, இடைநிலை, மேம்பட்ட நிலை எனவகுத்துள்ளார்கள். இவற்றில்தோன்றும் மாற்றங்களை விசேடமாகத் தயாரிக்

(12ம் பக்கம் பார்க்க)

# சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வேலை மாத்தினமெண்டு எனக்குக் காயிதம் எழுதுங்கோ. அதை நான் அந்தக் கப்பல் காறிக்கி வாசிச்சுக் காட்டுறன். உண்மை பொய் இங்கை எப்படித் தெரியப் போகுது. அவளுக்கு ஏன் இந்தப் பேராசை? தானும் எங்களைப்போல ஒரு கல் வீடு கட்டி லைற்றுப் போட்டு' மோட்டர் போட்டு டீ.வீ எடுத்து ...'' அருந்ததி அவ்வளவோடு அந்தக் கடிதம் படிப்பதை நிறுத்திவிட்டு அதனை அப்படியே வீட்டு வாசற் படியில் வைத்துவிட்டு, வீட்டு முகட்டை வெறிக்க வைத்துப் பார்த்தபடியேஏதோகனதூரத்திற்கு யோசிக்கிறாள். '...நீங்கள் ஏதோ தன்ரை புரிசனுக்குச் செலவுத் தானத்தை உண்டாக்குறதுக்காக இரண்டு விருந்தாளிகளைக் கொழும்புக்கு அனுப்பப் பாக்கிறியளாம் . தானும் முறையாய்த்தான் காயிதம் எழுதிப் போட்டிருக்கு எண்டு காலத்தாலை இராசாத்தி சத்தியமாக அருந்ததி மச்சாள் இப்படியெல்லாம் பெரிய குறையாக் கதைச்சவ ளென்று 'அண்டல் அன்னம்மாவின் வார்த்தைகளை மறுபடியும் அருந்ததி விசுவரூபமாக நினைத்துப் பார்க்கிறாள். ''உண்மைதானை ராசாத்தி... என்ரை வீட்டு விருந்தாளிகளுக்கு ஒரு கிழமைக்கு மாப்பிளைச் சோறு போட்டு உன்ரை வீட்டு மெயின் றோட்டுக் காணியை விக்கப்போறாய்... நான் மட்டும் உன்ரை வீட்டுக் கள்ளப் பூனைக்கும் பெட்டை நாய்க்கும் தின்னக் குடுத்து...என்ரை மூக்கு மின்னியைக் கூடவிக் கேலையடி?'' என்று அருந்ததி மனச்சலிப்பின் உச்சிக்கேபோய் விட்டபோது... இராசாத்தி வீட்டுக் கள்ளப் பூனையும் பெட்டை நாயும் அருந்ததி வீட்டுக் கோடியைச் சுற்றி வலம் வருகின்றன...

3

அருந்ததி கறிக்குள் போட வென்றுகழுவி வைத்த பெரிய கருவாட்டுத் துண்டொன்றை வாயில் தூக்கிஎடுத்துக்கொண்டு இராசாத்தியின் கள்ளப் பூனை ஓட... கையில் அகப்பட்ட தும்புத்தடியோடு அருந்ததி பூனையைத் துரத்திக்கொண்டோட... அந்தநேரம் பார்த்துத்தான் 'ஆத்துப் பறந்து' கொண்டு அருந்ததியின் வீட்டு வாசலுக்குள் வந்து மிதந்த இராசாத்தி ...பூனையோடு தடக்குப் பட்டு... பூனையை உழக்கி மிதித்துக் கொண்டே பெரிய பனை விழுந்த சத்தத்தில் விழுந்தெழும்பி ...உழக்கு வாங்கிய பூனையாக கியோ மாயோ வென்று கத்தித்தொலைத்ததும்... தும்புத் தடியோடு என்னவோ ஆத்திரத்தோடு நின்ற அருந்ததி ஒரு கணம் தன்னை மறந்தே சிரித்துத் தள்ளி விடுகின்றாள். ''அட நரகாலி கட்டின பூனை'' என்று ஒரு கணம் விழுந்தநோ மாறச் சத்தம் போட்டுச் சொன்ன இராசாத்தி. ''அதோடை இண்டைக்கு இந்தக் காத்தடிக்கிற அடியெண்டால்... அரையிலை கட்டியிருக்கிற துணி[illegible]மணியையும்... வங்காள விரிகுடாவிலை என்னவோ துவங்குதெண்டு காலமைச் செய்தியிலும் ரேடியோவிலை...'' என்று விழுந்த நோ மாற மேலும் அலட்டித்தள்ளி விட்டு ''மெய்யே அருந்ததி... நான் தந்ததைப் போட்டிட்டியே?'' என்று கேள்வி கேட்கத் தொடங்கியதும்...'' காயிதத்திலை நீ என்னடீ எழுதினனீ உனக்குத் தும்புத் தடியாலை தான்ரீ சாப்பாடு தர வேணும்'' என்று ஆவேசத்தோடு சொல்ல வாயெடுத்த அருந்ததி அப்படிக் கேட்க மனம் இடம் தராமல் ஓமென்று தலையாட்டி விட்டு அருண்டு கெம்பிக் கொண்டிருக்கும் பேய்க் காற்றைப் பார்க்கின்றாள். அவளுடைய மனம் ஆவேசக் காற்றில் உக்கிரமாக வெறியாடிக் கொண்டிருப்பதைப் போன்று மரந்தடிகளெல்லாம் ஆவேசம் பிடித்து ஆடிக் கொண்டிருந்தன. மனதிற்குள் என்னவோ ஏதோ சலசலப்பாக நினைத்துக்கொண்டவளாகஅருந்ததியின்முகமாற்றத்தில்வேறுபாட்டை வடிவாக அவதானித்துக் கொண்ட இராசாத்தி...''மெய்யே அருந்ததி? நீ இண்டைக்கி அண்டல்அன்னம்மாவைச் சந்திச்சனியே என்றுகேட்டுத் தொலைத்ததும் ''ஓம் சந்திச்சனான். அவள் உன்ரைபொட்டுக் கேட்டை எனக்குபுட்டு காட்டிப் போட்டா'' என்று ஆங்காரமாகப் பதில்சொல்ல நினைத்த அருந்ததி ''இல்லை... அவளை நான் இண்டைக்குக் கண்ணிலும் காணேலை'' என்றுஇராசாத்தியின் முகத்தைப் பாராமலே சொல்லி முடிப்பதற்கும் ''அருந்ததிமச்சாள் நீ சரியான ஆளப்பா.. இண்டைக்கு மீன் நல்ல புளுப்பு...நான் கேட்டநேரம் என்னோடை வந்திருந்தால்...'' என்று பதிறுகட்டைத்தொனியில் கத்திக்கொண்டு ''அண்டல்'' அன்னம்மா வந்துநுழைந்ததும்...ஏழெட்டுப் பூனைகளோடு தடுக்குப்பட்டு மிதித்துத் தள்ளிக்கொண்டே ஏழுகரணப்பட விழுந்து எழும்புவதுபோன்ற கெலிப் போடும்விறைப் போடும் இராசாத்தி அருந்ததியின் முகத்தையும் அண்டல் அன்னம்மாவின் முகத்தையும் மாறிமாறிப் பார்க்க சன்னதம் பிடித்தகாற்று உய் என்று ஒரு சுழற்றுசுழற்றி வீசித்தள்ள...மேல் வாசற் படியில் அருந்ததி வைத்த அந்தக் கடிதம் காற்றில் அடியுண்டு வந்து இராசாத்தியின் மடியில் பொத்தென்று விழுகின்றது.

(யாவும் கற்பனை)

## பிணி நீங்க—

எல்லாப்பிணியும் என்றனைக், கண்டால்
நில்லாதோட நீ எனக்
கருள்வாய்!

—கந்தசஷ்டிகவசம்

## இரு அப்பிள்

ஒருநெல்லிக்காய் இரண்டு அப்பிளுக்குச்சமம்.

## இந்தமண்

''என்னைக்
கருக்கொண்டிருந்தது
என்
மாதாமட்டுமல்ல......
இந்த
மண்ணும்கூடத்தான்...
அதனால்தான்
இந்தப்பூமியின்
புழுதிஸ்பரிசம்கூட
இன்னும்
புளக்காங்கிதமளிக்கிறது
எனக்கு.........!''

- இரா. வேலுச்சாமி

ஆசிரியர்: மழை ஏன் பெய்கிறது.

மாணவி: வீட்டில் எங்கே எங்கே எந்த ஓட்டில ஒழுக்கு இருக்குது எண்டு கண்டுபிடிக்க

ஏ. யோ. கிரிதரன்.

# ஈராக்கில் மகிழ்ச்சியுடன் ஈழத்துத் தமிழ்ப் பெண்கள்!



ஈராக்கில் பெண்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்! உழைக்கவந்திருக்கும் ஈழத்துத் தமிழ்ப் பெண்களும் இதற்கு விதிவிலக்கல்ல! கைநிறையப் பணம் மட்டுமல்ல, மனம் நிறையமகிழ்ச்சியையும் அவர்களிடம் காணக்கூடியதாக இருக்கின்றது. கண்ணகியின் காவியத்தைப்படித்துக் கொண்டு, கண்ணீரோடு காலத்தைப்போக்கி, சீதனக் கொடுமையால் இங்கே நசியுண்டுநலிந்து போவதைவிடப் போலிச் சம்பிரதாயங்களைத் தூக்கி எறிந்துவாழும் துணிவுள்ள பெண்களாக அவர்கள் அங்குவாழ்கிறார்கள்!

ஈராக்நாட்டில் மூன்றாண்டு காலம், தொழில் புரிந்துவிட்டுச்சமீபத்தில் நாடுதிரும்பிய சுன்னாகத்தைச் சேர்ந்த இளைஞர் சபா புஷ்பநாதன்தான் இப்படிச்சொன்னார்.

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் தொழில் புரிந்துவிட்டு, ஈராக் சென்ற இவர் ஒரு பொறியியல் பட்டதாரி.

ஈராக்தலைநகர் பாக்தாத்திலிருந்து சிலமைல் தொலைவிலுள்ள உரத்தொழிற்சாலையில், பொறியியலாளராகக் கடமையாற்றினர்

அந்தநாட்டு அனுபவங்களை அவர் என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

## போலிகளை

## வெறுத்து...

''நமது பெண்கள் எப்படியிருக்கிறார்கள்?'' என்பது என் கேள்வி

''தலைநகரான பாக்தாத்தில், நட்சத்திர ஹோட்டல்களில் நமது பெண்கள்பலர் பணிபுரிகிறார்கள். 'கிடுகு வேலி'க்கு வெளியேவந்துள்ள அப்பெண்கள் போலிகளை வெறுக்கும் ஒருசமுதாயத்துடன் தம்மை இணைப்பதில், நிச்சயம் வெற்றிபெறுவார்கள்!'' என்று பதில் சொல்கிறார்.

அந்தநாட்டுப் பெண்களைப் பற்றிச் சொல்கிறார்:

''அந்தப் பெண்களும் மிகவும் ஒழுக்க சீலர்களாக இருக்கிறார்கள்! அந்தநாட்டு ஆண்கள் தமது உடல்வலிமைக்கும், பணவலிமைக்கும் ஏற்ற விதத்தில், மனைவிகளின் 'தொகை'யை வைத்திருக்கிறார்கள். சிலருக்கு மூன்று மனைவிகள். சிலருக்கு ஐந்து மனைவிகள். ஒரேவீட்டில் அத்தனைமனைவியர்களையும் 'பிச்சல்பிடுங்கல்' இல்லாமல் வைத்திருக்கிறார்கள். ஒருமனைவியை வைத்துக்கொண்டே பலர் படாதபாடு படுகிறார்கள்! ஆனால் ஐந்துமனைவிகளையும் ஒரேவீட்டில் ஒற்றுமையாக வைத்திருப்பது நம்மைப் பொறுத்தவரையில் நடக்கக் கூடியகாரியமா? ஆனால் ஈராக்கில் இந்தவாழ்க்கை இருப்பதைப்பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கிறேன்'' என்றவர்.

''அத்தனை மனைவிகளையும் திருப்திப்படுத்தக்கூடிய முறையில் குடும்பத் தலைவன் நடந்து கொள்கிறான்'' என்கிறார்.

ஷர்மினி

## வாழ்வுக்கு

## அவசியமான

## பாடம்

மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதை மூன்றாண்டுகள் படிக்கக்கூடிய அனுபவம் தனக்குக் கிடைத்திருப்பதாகச் சொல்கிறார் புஷ்பநாதன்!

வாழ்க்கைக்கு அவசியமான பாடத்தை ஈராக்கில் படித்தேன் என்று பெருமையோடு சொல்கிறார் அவர்.

போலித்தனமில்லாத ஒரு சமுதாயத்தை அங்கு பார்த்தாராம் அப்படியான ஒரு சமுதாயம் இந்த நாட்டில் எப்போது தோன்றப்போகிறது என்று ஏக்கம் புஷ்பநாதனுக்கு இன்னும் தெரியவில்லை!

## வித்தியாசமான நாடு

''மத்தியகிழக்கு நாடுகளில் ஒன்றுதான் இந்த ஈராக். ஆனாலும் அவைகளில் வித்தியாசமான ஒரு நாடாக இருக்கிறது! சந்திக்குச்சந்தி 'பார்'கள் இருக்கின்றன இரவுக் கிளப்புகளுக்குப் பஞ்சமில்லை!' என்று சொன்னவர், அங்கு நிம்மதியான வாழ்க்கை நடக்கிறது என்று பெருமூச்சுவிட்டார்!

# உடற்பயிற்சி போன்ற மனப்பயிற்சியே தியானம்

(11ம் க்கபத் தொடர்ச்சி)

கப்பட்ட எலெக்ரோனிக் இயந்திரமொன்றின் மூலம் அவதானிக்கிறார்கள். அந்த இயந்திரம் பதிவுசெய்த கில வரைபடங்கள் ஒரு மனநிலைபடிப்படியாகப் பக்குவமடையந்த விதத்தை தெளிவாகக் காட்டுகின்றன.

''விபத்துக்கள் குற்றச்செயல்களையும் தியானப்பயிற்சிகள் குறைத்துவிடுகின்றன. அவதானம், நிதானம் என்பன இப்பயிற்சிகளால் அதிகரிப்பதால் ஒருவாகன வோட்டி தனது வாகனத்தை போக்குவரத்து விதிகள்பிறழாது ஓட்டுகிறான். நிதானம்ஏற்படுவவதால் குற்றசெயல்களைச் செய்யபலர்பின் வாங்குகின்றனர்'' என்றும் இவர்கள் கூறினார்கள்.

## நீரும்

## சூழ்நிலையும்

ஒருநாட்டையே தியானத்தின்வலிமையால் சீராக்கலாம் என்றுகூறிய இவர்கள் தமது நாட்டின் ஜனாதிபதியை உதாரணம்காட்டி விளக்கமொன்றையும் அளித்தனர்:

''திரு றெஞல்ட்றீகன் ஜனாதிபதியாகுமுன்னர் ஒருசாதாரண நபராகவே இருந்திருப்பார். நாட்டின் தலைவரானதுமே அவரில்மாற்றங்கள் தோன்றியிருக்கும். ஒருநாட்டின் சூழல் பதட்டமுடையதாக அல்லது பிரச்சினையைத் தோற்றுவிப்பதாக இருந்தால் அவரும் சர்ச்சைக்குரிய ஒருவராகிவிடுகிறார். நாட்டு நிலைமை ஒருகண்ணாடியில் போன்று அவரில் பிரதிபலிக்கும். அவரின்நடவடிக்கைகளும் அந்தநிலைமையை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும்.

இந்தநிலைமையை மாற்றியமைத்து விட்டால் அம்மாற்றத்தின் பிரதிபலிப்பையும் அவரில் காணலாம். எனவேஒரு மனிதனை பின்னர் அவனது சமூகத்தை, தொடர்ந்து அச்சமூகம் சார்ந்த நாட்டையும் பக்குவமடையச் செய்தால் அந்நாட்டின் தலைமையும் பக்குவமடையும். இதற்கு தியானமே வித்திடுகிறது ''என்பது மகரிஷி மகேஷ யோகியின் முடிந்தமுடிவு. அதைநாமும் பூரணமாக ஏற்றுக்கொள்கிறோம்'' என்கிறார்கள் என்னுடன் பேசியஅந்தஒரு ஆஸ்திரேலியரும், அவரது மூன்று அமெரிக்கசகாக்களும்:

இவர்களுடனான சந்திப்பின் போது இவர்களின் விளக்கங்களை செவிமடுத்த அதேவேளை இவர்கள்மீதும் நோட்டமிட்டேன். தெளிவாகப்பேசுகிறார்கள். அவ்வப்போது சுவாரஸ்மான உதாரணங்கள், அனுபவங்ளிற் கூறினார்கள். மொத்தத்தில் அவர்கள் ஒரு உயர்ந்த பக்குவமடைந்த மனநிலையினை அவர்கள்கூறிய மேம்பட்ட தியானத்தின் மூலம் பெற்றிருப்பதையே என்னால் தெளிவாக உணர்ந்து கொள்ளமுடிந்தது.

## உயர்ந்த கொள்கை

எல்லா மதங்களும் பஞ்சசீலத்தை ஏற்றுக் கொள்ளினும் பௌத்த மதமே பஞ்சசீலத்தைக் கொள்கையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதை பௌத்தர்கள் யாவரும் (பாளி மொழியிலுள்ளது) பாடமாக்கி வைத்திருப்பார்கள். அதில் முதலாவது சுலோகம்:

'பாணாதிபாதா வேரமனீ ஸிக்காபதம் ஸமாதியாமி'

இதன்பொருள், 'கொல்லாமல் இருத்தல் என்னும் கட்டளையை ஏற்றுக் கொள்கிறேன்' என்பதாகும்.

அனுப்பியவர்: ராகவன்.

## படரத் துடிக்கும் முல்லைகள்

நாங்கள்
படரத்துடிக்கும் முல்லைகள்
பாரிகள்...?
தேர் வாங்க
ஊர் ஊராய்த்
திரிகிறார்கள்

ஏ.ரி.சுதன்

# கிழக்கு-மேற்கு உடன்பாடு ஏற்படுமா?




கிழக்கு-மேற்கு [illegible] ஆயுதப் பரிகரணப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென "வார்ஸோ" [illegible] நாடுகள் "நேட்டோ" அணி நாடுகளைக் கோரியுள்ளன. இவ்வாறான ஒரு உடன்

பெரி சண்முகநாதன்

படிக்கை செய்துகொள்ளப்படுவதன் அவசியத்தை வார்ஸோ நாடுகள் கடந்த ஆண்டு ஜனவரியிலும் வலியுறுத்தியிருந்தன.

தற்சமயம், வல்லரசுகள் இரசாயன நாசகார ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகின்றன என்ற பேச்சு வலுத்துள்ள சூழலில் நாசகார ஆயுதங்களைத் தடைசெய்வது, இல்லை தொழிப்பது சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்குவதற்கு மேற்படி கோரிக்கை நல்லதொரு சூசகமாகவே தென்படுகிறது.

ஸ்டொக்ஹோமில் ஐரோப்பிய ஆயுதபரிகரண மாநாடு மீண்டும் நடைபெறவுள்ள நேரத்தில் "வார்ஸோ" நாடுகள் விடுத்துள்ள மேற்படி கோரிக்கையானது, ஐரோப்பாவின் நடுத்தர வீச்செல்லையுள்ள கேந்திரோபாய ஏவுகணைகளின் ஆர்த்தலை மட்டுப்படுத்துவது பற்றிய பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடருவதற்கு வழிவகுக்கலாம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இவ்வாண்டு பெப்ரவரியில் இரசாயன ஆயுதங்களைப் பரஸ்பரம் பார்வையிடுவது அவற்றை இல்லாதொழிப்பது ஆகியன தொடர்பாக சோவியத் யூனியன் ஓர் ஆக்க பூர்வமான ஆலோசனையை முன்வைத்திருந்தது. இந்த ஆலோசனை எதிர்கால ஆயுதப் பரிகரண உடன் படிக்கைக்கு நல்லதோர் அத்திவாரமாக அமையும் எனப் பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் பல்வேறு சாக்குப் போக்குகள் கூறி மேற்படி ஆலோசனையை வாஷிங்டன் நிராகரித்து விட்டது. அது மட்டுமன்றி, அமெரிக்காவுக்கு வெளியே வைக்கப்பட்டுள்ள இரசாயன ஆயுதங்களின் அளவை 30 லட்சத்திலிருந்து 50 லட்சமாக அதிகரிப்பதற்கும் வாஷிங்டன் திட்டமிட்டுள்ளது என்றும் இதற்கு பத்தாயிரம் கோடி டாலர்கள் செலவிடப்படும் எனவும் வாஷிங்டன் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆப்கானிஸ்தானிலும், ஈராக்- ஈரான் யுத்த முனையிலும் ரஷ்யாவின் இரசாயன ஆயுதங்கள் பிரயோகிக்கப்பட

(15ம் பக்கம் பார்க்க)

# அல்குர்ஆனின் இலக்கியச் சிறப்புக்கள்

ஓர் அருட்கொடையாக தோன்றிய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மூலமாக மக்கள் அனைவருக்கும் ஓர் வழிகாட்டுதலாக அருளப்பெற்ற திரு. வேதமே திருக்குர்ஆன் ஆகும்.

இற்றைக்கு 1400 ஆண்டுகளுக்கு முன் மக்காவிலும் மதீனாவிலும் கொஞ்சம் கொஞ்சமாக காலத்திற்கும் தேவைக்கும் ஏற்றவண்ணமாக அல்லாஹ்வினால் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆன் அருளப்பட்டது. மனித சமுதாயத்தின் சிந்தனையை தூண்டி செயல் முறையை ஒழுங்குபடுத்துவதிலே திருக்குர்ஆன் ஓர் உயர்ந்த இடத்தை பெற்றிருக்கின்றது. குர் ஆன் என்ற அரபிச் சொல் "ஓதக்கூடியது" "ஓத வேண்டியது" எனப் பொருள்படும். அற்புதமான அமைப்பு ஒப்பற்ற கருத்துக்கள் அவற்றினால் ஏற்பட்ட உயர்ந்த விளைவுகள் என்பன திருக்குர்ஆனின் மூன்று சிறப்பு அம்சங்களாகும்.

முகம்மட் சுல்தான் ஜினூஸ்

திருக்குர் ஆனின் அமைப்பிலே மற்றோர் அம்சம் அதன் நடையழகாகும் அதன் நடை [illegible] வசனமுமன்று, [illegible] இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட [illegible] இவ்விரண்டிற்கும் மேம்பட்டதான நடையில் அமைந்துள்ளது. [illegible] பாகவேயிருக்கும். திருக் குர் ஆனின் வசனங்களோடு பிற வசனங்களைக் கலந்து எழுதினாலும் அல்லது பிற வசனங்களோடு திருக்குர்ஆனைக் கலந்து எழுதினாலும் சாதாரண அரபி அறிவு உடையோரும் குர்ஆனின் வசனங்களை உடனே கண்டுகொள்ளக்கூடிய [illegible] அதன் நடையழகு தனித்தன்மை வாய்ந்ததாகும். இவ்விறைத் திருவசனங்களுக்கு ஒப்பானவோ மிக்கானவோ யாரும் இதுவரை வசனங்களை உருவாக்கவில்லை. இனி மறுமை நாள்வரை யாராலும் அவ்வாறு உருவாக்கவும் முடியாது.

இறை மறையாம் திருக்குர் ஆனிலுள்ள 6666 திருவசனங்களிலுமே வழுச் சொல்லோ இழிச்சொல்லோ, இலக்கண பேதமோ ஒன்றுகூடக் காண முடியாத ஒப்பற்ற முறையில் அமைந்திருக்கின்றன. திருக் குர்ஆன் ஒரு வாழ்க்கை விளக்க நூல்.

சாதாரணமாக இலக்கியத்தை வேதங்கள், புராண இதிகாசங்கள், காவியங்கள் என மூன்றாகப் பிரிப்பது உண்டு. தீயதைத் தடுத்து நல்லதை ஏவுவன வேதங்கள். கடந்த காலத்தில் இருந்தோரின் வரலாற்றைக் கூறி அவர்களுடைய வாழ்விற்கும் தாழ்விற்கும் காரணமான நிகழ்ச்சிகளை விளக்கி [illegible] கடைப்பிடிக்க ஏவுவன புராதன இதிகாசங்கள்; சொல்லழகிலே கற்பனை நயத்தைக் கலந்து [illegible] காவியங்களாகும்.

திருக்குர்ஆனிலே வேதத்தின் பேதமும் உண்டு வரலாற்றின் உண்மையும் உண்டு. காவியத்தின் [illegible] நயமும் உண்டு (கற்பனையைத் தவிர) எனவே உலகில் ஒப்பற்ற இலக்கியம் என்றும் அது இறைமறையாம் திருக்குர் ஆனேயாகும். என்பதில் ஒரு சந்தேகமும் இல்லை. குர்ஆனிலுள்ள மொத்த எழுத்துக்கள், புள்ளிகள், சொற்கள் முதலியவற்றிற்கும் தெளிவான ஆதாரத்துடனான கணக்கிருப்பதால் யாராலும் எம் மாற்றமும் செய்யமுடியாது.

உலகிலுள்ள பெரும்பாலான மொழிகள் முதல் எழுத்து "அ" என்ற ஒலியுடன் அமைந்திருப்பன. ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு தனிச் சிறப்பிருக்கலாம். ஆனால் ஒரு மொழியிலுள்ள எல்லா எழுத்துக்களையும் கொண்டு ஒரு சொற்றொடர் ஒரு பந்தி உள்ளதா? அல்குர்ஆனில் 28 மெய்யெழுத்துக்களுள்ளன. இந்த 28 எழுத்துக்களையும் பயன்படுத்தி அல்குர்ஆனில் 6666 திருவசனங்களும் இரு திருவசனங்கள் அமைந்துள்ளன. அவை (1 சூரா [illegible] இறுதித் திருவசனம் (48:29) சூரா ஆல இம்ரான் (3:154)

திருக்குர்ஆனின் இலக்கிய நயம் பற்றி மட்டும் விரித்துரைப்பதென்றால் ஓர் ஏடுகள் போதாது. எனினும் திருமறையின் ஒரு சில சிறப்புக்களேனும் நம் அறிவிற்கு விருந்தாகி அதன் தன்மை நம் உள்ளத்தில் பதிந்து அதன் விளைவு நம் வாழ்வில் மிளிருமானால் அதுவே பெரும் பாக்கியமாகும்.

## இப்படிவேறு சொற்கள் உண்டா?

○ தமிழில் போர் என்றும் ஆங்கிலத்தில் வார் (War)

○ தமிழில் வார் (ஊற்றுதல்) என்றும் ஆங்கிலத்தில் போர் (Pour)

த. ம. சிறிதரன்

இடைவிடாது புகை பிடிக்கும் கணவனிடம் மனைவி: எப்படியாவது விடாமுயற்சி செய்து சிகரெட் பிடிப்பதை நிறுத்தி விடுங்களேன்.

கணவன்: விடாமுயற்சி செய்தால் எப்படி விடமுடியும் விடு(ம்) முயற்சி தான் செய்கிறேன். ஆனால் முடியவில்லை.

-சிறீ





விவசாயிகளே!

இதுவரை தங்களுக்கு
பொலிடோல், தமரேன், அந்திரக்கோல்
விநியோகித்த
'பேயர்' ஸ்தாபனத்தாரின்
நிகரற்ற இன்னுமோர் புதிய கிருமி நாசினி
பேய்த்திரேயிட் ஈ. சி. 050
Baythroid E. C. 050
விலை 100 M. L. 180/-
(1 அவுன்ஸ் 6—8 கலன் தண்ணீரில் கலக்கவும்)

மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, கத்தரி, கோவா, புகையிலை மற்றும் மரக்கறிப் பயிர்களைத் தாக்கும் இலை அரிபுளு, வெட்டுப்புளு, சந்துகுத்தி, காய்துளைப்பான், ஆகியவற்றை அறவே ஒழிக்கும் உன்னத கிருமிநாசினி.

இருப்புகளுக்கு முந்துங்கள்
ஹேகெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, த. பெ. இல: 70, கொழும்பு-10.
யாழ். மாவட்ட விநியோகஸ்தர்கள் :-
யூனியன் ஏஜென்ஸீஸ், 50A, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

# கேதீச்சர சூழலில் ஒரே சமயத்தில் ஐயாயிரம் அடியார்கள் தங்குவதற்கு மடங்கள்!

பல அடியார்கள் தூர இடங்களில் உள்ள ஆலயங்களுக்குச் செல்ல முடிவதில்லை. அங்கு போனால் எங்கு தங்குவது? என்றவிடை காணத் தெரியாத கேள்வியே பலருக்கு திருக்கேதீச்சரம் செல்லவேண்டும் என்ற ஆசை எழாமலும் தடுத்துவிடுகின்றது.

## 15 மடங்கள்

திருக்கேதீச்சரத்தில் ஒரே சமயத்தில் ஐயாயிரத்துக்கும் அதிகமான யாத்திரிகர்கள் தங்கக்கூடியவகையில் ஆலயத்தைச் சுற்றிவரப் 15 மடங்கள் இருக்கின்றன என்பது ஆச்சரியப்படத்தக்க தகவலாகும். இப்படிநிறைந்த மடங்களுக்கும் தனித்தனியே சிறப்பான வரலாறுகளும், அமைப்புகளும் அமைந்திருக்கின்றன.

திருக்கேதீச்சர வடமேற்கு திசையில் இறங்கியதும் ஆலயத்தின் அருகாமையில் திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம், நகரத்தார் மடம், அம்மா சத்திரம், நடராஜர் மடம், நாதன் சத்திரம், மலேசியா மடம் என்பன அமைந்துள்ளன.

## திருஞானசம்பந்தர் மடம்

ஆலயப்பணியில் ஆர்வம் கொண்டு பாடுபட்ட சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் பொறியியல் நிபுணர் ஆறுமுகம் மருதப்பு முதலியோர் 1958-ம் ஆண்டளவில் திருஞானசம்பந்தர் மடத்தைக் கட்டியிருக்கிறார்கள்.

நெல்லியடியைச் சேர்ந்த கந்தசாமி ஓவசியரே தனக்குத் தெரிந்த பல அன்பர்களின் உதவி கொண்டு அம்மா சத்திரத்தைக் கட்டியிருக்கிறார்.

பூநரியைச் சேர்ந்த நாகலிங்கம் என்னும் அன்பர் தன் உறவினர் ஊரவர்களின் உதவி கொண்டு நடராஜர் மடத்தைக் கட்டியுள்ளார்.

## மலேசியா மடம்

இலவகுடங்களுக்குமுன் வைத்திய பரிசோதனை நிலையம் பொதுநூல் நிலையம் ஆகியவற்றையும் விளக்குப்பெற்று அதனோடு புதிய கட்டடங்களையும் இணைத்தே மலேசியா மடம் உருவாகி உள்ளது. இது பல விதமான நவீன வசதிகள் கொண்ட விசாலமான அறைகளும் மண்டபங்களும் உடையதாய் விளங்குகின்றது.

கேதீச்சர ஆலயத்தின்-தென் பகுதியில் கௌரி அம்பாள் ஆலய முன்பாக மெய்கண்டார் மடம், மகாசிவராத்திரி மடம் என்பன உள்ளன. மெய்கண்டார் மடத்தைச் சபாரத்தின முதலியார் மடம் என்று அழைக்கின்றார்கள்.

மகாசிவராத்திரி மடம் மன்னாரில் உள்ள அரசாங்க சைவ உத்தியோகத்தர்களால் நிர்வகிக்கப்படுகின்றது. மகாசிவராத்திரிக் காலங்களிலும் தேர் தீர்த்தம் முதலிய பிரதான திருவிழாக் காலங்களிலும் இங்கு விசேடமாக அன்னதானம் வழங்கப்படுகின்றது.

இம் மடங்களில் துறவுக்கோலம் பூண்ட அடியார்கள் காணப்படுகின்றார்கள். இம் மடங்களில் ஆலயப்பணி செய்யும் அடியார்கள் தங்கியிருக்கிறார்கள்.

மன்னாரில் கடமை செய்பவர்களையும், சைவ உணவு ஒழுக்கமுள்ளவரையும் வாழும் சைவ அன்பர்கள் இங்கும் இம் மடங்களில் தங்கித் தமது சமய ஆசாரத்தைப் பேணவும் இம் மடங்கள் இடங்கொடுக்கின்றன.

இரவிலும், திருவிழா முதலான நடைபெறும் நாட்களில் மன அமைதிக்காகவும் ஏகாந்த வாசத்தில் இறைநாட்டங்கொள்ளவும் புண்ணியத்தலவாசத்தில் ஆன்மீகவுணர்வைத்தை வளர்த்துக் கொள்ளவும் பாலாவியில் தீர்த்தமாடித் திருக்கேதீச்சரப் பெருமானை வணங்கி அருள்பெறவும் இம் மடங்கள் பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளன.

(தொடரும்)

## பாலாவிக் கரையினிலே-3

தி. பொன்னம்பலவாணர்

---

[★ இன்று திருக்கேதீச்சர ஆலய எட்டாந் திருவிழா]

## பாலாவிக் கரையுள்ளானே

வாதையோ தெரியா தையா
பாவியேன் பண்பு கெட்டு
வேதையிற் புகுந் துழன்று
புண்ணிய மறியேன் வாழ்வின்
சோதனை பலவுங் கண்டு
சோர்ந் திடும்வேளை தன்னில்
பாதமே துணையாய் கொண்டேன்
பாலாவிக் கரையுள்ளானே

பற்றினுள் பாவ மென்னும்
வண்ணிய நாயி னேற்கு
உற்றதோர் துணையுண்டாமோ
உன்திரு நாமம் இன்றிக்
கற்றதோர் கல்வி யுண்டோ
கௌரியைப் பாகம் வைத்தாய்
பொற்பதம் பற்றிக் கொண்டேன்
பொறுத் தருள் தாருமையா

--எஸ். சி எஸ். சிதம்பரநாதன்

---

ஒருவர்: பெண் பார்க்கவரும் எல்லாப் பையன்களுமே இரண்டாவது பெண்ணைத் தான் கேட்கிறார்கள்.

மற்றவர்: ஏன் பெரியவளுக்கு என்ன குறை?

ஒருவர்: குறை ஒன்றுமில்லை பெரியவளுக்குச் சம்பளம் முந்நூறு. இளையவளுக்கு சம்பளம் எண்ணூற்றைம்பது.

'கிறி'

---

## இந்தோனேஷியா

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது அரசின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைச் செவ்வனே நடைமுறைப்படுத்த உதவி வருகின்றது.

பல்கலைக்கழகப் பட்டப் படிப்பை முடித்ததின் பட்டப் பின் படிப்பைத் தொடரவோ, அரச சேவையில் சேர்வதற்கு முன்னுரிமை பெறவோ விரும்பும் எந்தவொரு பட்டதாரி மாணவனும் இந்தத் தொண்டர் ஸ்தாபனத்தில் சேர்ந்து இரு வருடங்களிலிருந்து ஐந்து வருடங்கள்வரை இந்நிறுவனம் அனுப்பிவைக்கும் தீவுக்குச் சென்று - இந்தோனேஷியாவின் எல்லைக்குட்பட்ட 86,000 தீவுகளில் ஒன்று! - தான் பெற்ற கல்வியறிவுக்கேற்ப சேவையாற்றவேண்டும்.

தெரிவு செய்யப்படும் தீவில் ஒரு மாவட்டத்தின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் ஒரு உபமாவட்டத்திலேயே (கச்சமத்தா) புரட்சி தொண்டர்சேவையாற்ற அனுப்பப்படுவார். தேசா என்றழைக்கப்படும் பல கிராமங்கள் ஒன்று சேர்ந்த ஒரு பிரதேசத்தையே கச்சமத்தா என்பர். ஒவ்வொரு தேசாவுக்கும் ஒரு கிராமத் தலைவர் (கப்பாலாதேசா) இருப்பார். அவரே கிராமத்தின் முடிசூடா மன்னராவார். அரசு தன் அபிவிருத்தித்திட்டங்களை கிராமத் தலைவருக்கூடாகவே செய்யும். கிராமத்தின் பூரண செல்வாக்கைப்பெற்ற ஒருவரே தலைவராகத் தெரிவு செய்யப்படுவதால் கிராமம் முழுதும் அவரது ஆணைகளுக்குக் கட்டுப்பட்டே நடக்கும்.

புரட்சி தொண்டர், கிராம சேவையாற்றுவது கப்பாலா தேசாவுக்கு ஆதாரமாகவேயாகும். பொதுவாகவே புரட்சித்தொண்டரின் வாசஸ்தலம் கிராமத்தலைவரின் இல்லம் அல்லது அவரது உதவியாளர்களின் ஒருவரது இல்லமாகவே இருக்கும்.

தன் சேவைக் கிராமத்தை அடைந்ததும் புரட்சி தொண்டர் தனக்கு முன் பரிச்சயமில்லாத அந்தக்கிராமத்தின் பொருளாதாரம் நிர்வாகம், கிராம அமைப்பு போன்ற விபரங்களை ஆராய்ந்து அக்கிராமத்தில் தன் சேவையை எப்படி வழங்கலாம் என்று தீர்மானிப்பார். அவரது திட்டம் கிராமத்தின் தலைவரால் ஏற்கப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும், கிராமத்தின் தலைவர் கல்வி அறிவு குறைந்தவராகவே இருப்பார். ஆயின், புரட்சி ஊழியர் பால் கிராமம் பெருமதிப்பு வைத்திருக்கும் காரணத்தால் புரட்சி ஊழியர் தீட்டும் எந்தத்திட்டத்தையும் கிராமத்தலைவர் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கும்.

புரட்சி ஊழியரின் சேவைக் காலம் முடிவுற்றதும் தொழில் அமைச்சு ஒரு நற்சான்றிதழை வழங்கும். இச்சான்றிதழைப் பெற்றுக்கொண்டவர் எதிர்காலத்தில் இலகுவாக அரச சேவையில் புகுந்துவிட வாய்ப்புண்டு.

இலங்கையில் வடபகுதியில் சில காலங்களுக்கு முன்னர் இருந்ததைப்போன்று அங்கு இன்று அரசாங்க சேவையின் பால் மோகம் அதிகமாகவே காணப்படுகின்றது. தனியார் துறையின் சகல தரங்களிலும் அரசுடன் போட்டியாக தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற போதிலும், அந்த நாட்டைப் பொறுத்தவரையில் அரசசேவையாளர்களுக்கு பல வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு மக்கள் மத்தியில் அரசாங்க உத்தியோகத்தர் அனைவரும் உயர்வாக மதிக்கப்படுகிறார்கள். இதன் காரணமாகப் பலரும் அரச சேவையை விரும்புவது தவிர்க்க முடியாததாக உள்ளது. பல்கலைக்கழகங்களில் சமயத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர்கள் தனியார் துறையில் வேலைவாய்ப்புக் குறைவானவர்களாவர். இத்தகையவர்கள் 'புரட்சி' நிறுவனத்தில் போட்டிபோட்டுக் கொண்டு விண்ணப்பித்துச் சேர முயல்வதை அவதானிக்க முடிந்தது.

தமது உயர்கல்வியின்பொருட்டு 'புரட்சி' நிறுவனத்தில் சேர்ந்து சேவையாற்றும் பல பட்டதாரிகளை நான் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். இவர்கள் புரட்சியில் சேவை செய்யும் அதேவேளையில் இந்நிறுவனத்தின் செலவிலேயே பல அனுபவங்களைப் பெற்றும், ஆராய்ச்சிகளை மேற்கொண்டும் வருகிறார்கள்.

கல்வித்துறையில் பட்டம் பெற்ற ஒருவர் முதுமானிப் பட்டம் பெறுவதானால் அவர் தமது துறையில் இருவருடங்கள் கிராமங்களில் சேவையாற்றி அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் என்று ஒரு விதி அங்கு உள்ளது.

புரட்சி நிறுவனத்தில் சேர்ந்து தொண்டர் சேவையாற்றுவதால் ஒருவருக்குக் கிட்டும் பல நன்மைகளில் சில: அரசாங்கத்தால் வழங்கப்படும் ஒரு சேவைச் சான்றிதழைப் பெறல், மாதாந்தம் 60 அமெரிக்க டொலர் பெறுமதியான மாதாந்த வாழ்க்கைப்படியைப் பெறல் (இத்தொகை இந்தோனேசிய பட்டதாரிகளின் ஆரம்பகால சராசரி வேதனமாகும்), சேவைப்பகுதிகளுக்கு இலவச பிரயாண வசதிபெறல், சேவைக்கால முடிவில் அரசதொழில் வாய்ப்பில் முன்னுரிமை பெறல், உயர்கல்வியைத் தொடர அனுமதி பெறல் என்பனவாகும்.

புரட்சி நிறுவனத்தின் நிர்வாகம் நிதி ஆகியன தொழில் அமைச்சின் பொறுப்பிலேயே உள்ளன.

அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் "புரட்சி" சேவையின் பயனாகப் பல நன்மைகளைப் பெற்றுக்கொள்கிறது. பட்டதாரி இளைஞர்களின் சேவையை தொண்டாகவும், குறைந்த வேதனத்துடனும் பெறமுடிகிறது. சாதாரண அரச ஊழியர்கள் செல்ல அஞ்சும் கடினப் பிரதேசங்களுக்குச் சென்று சேவையாற்ற பட்டதாரி இளைஞர் முன்வருவது அரசுக்குக் கிடைக்கும் மற்றொரு நன்மையாகும். (மிகுதி அடுத்தவாரம்)

நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!

இவை உங்கள் முதலீட்டிற்கு உத்தரவாதம்

நிலையான வைப்பிற்கு யாழ். நகரில் அதியுயர் வட்டி 30% வழங்கும் ஒரே நிறுவனம்.

SHABRA

துரிதமாகவும், துலக்கமாகவும் பிரதிகள் செய்யவும், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உடனுக்குடன் தட்டச்சு செய்யவும் நாடவேண்டிய இடம் "ஷப்ரு"

61, நியூ புளர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொ. பேசி. இல: 589310

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி. இல: 22073

